



The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879-1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 11, இதழ் - 3   மே - ஜுன் 2025

R4832

## SENNACHERIB TURNED BACK
## சனகெரிப் திரும்பிப் போனான்

ஏசாயா 37: 14-38

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்." சங்கீதம் 46:1

கடந்த பாடத்தில் யூதாவின் நல்ல ராஜாவான எசேக்கியாவைப் பற்றியும் தேவனுக்கான அவனது வைராக்கியம், அவன் செய்த குறிப்பிடத்தகுந்த பஸ்கா ஆசரிப்பு மற்றும் விக்கிரக ஆராதனையை நீக்கிப்போடுதல் போன்றவைகளைக் குறித்தும் கவனித்தோம். இந்த பாடம் அவனது ஆளுகையின் கடைசி பகுதியைப் பற்றியதாகும். நினிவேயை தலைநகராகக் கொண்ட அசீரிய சாம்ராஜ்யம் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் முதலாவது உலகலாவிய சாம்ராஜ்யமாக ஆகக்கூடிய அளவிலும் மகா வல்லமையும் அச்சுறுத்தக்கூடிய அளவிலும் ஆகியிருந்தது.

எசேக்கியா யூதாவின் அரியணைக்கு வரும் முன்பே அவனது தந்தை அசீரிய ராஜாவுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு கப்பம் செலுத்தி வந்தான். எகிப்தியர்களும், பெலிஸ்தியர்களும் மற்றும் சீதோனியர்களும், அசீரியாவின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற கூட்டமைப்பு ஏற்படுத்த யூதேயாவை வலியுறுத்தினார்கள். அவனது ஜனங்கள் வலியுறுத்தியதினிமித்தமாக, தீர்க்கதரிசி ஏசாயாவின் மூலம் தேவனுடைய அறிவுரைக்கு எதிராக எசேக்கியா கூட்டமைப்பில் சேர்ந்து கப்பம் கட்டுவதை நிறுத்தினான். காரியம் பிரபலமானது. ராஜா இந்த காரியத்தில் தீர்க்கதரிசி தேவனுடைய பிரதிநிதியாக இருந்ததை உணர்ந்தவனாக தெரியவில்லை. இஸ்ரயேல் தேசம் சர்வ வல்லவருடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குள் இருந்தது என்பதையும் அவரே அவர்களது தேவனாகவும் அவர்களது ராஜாவாகவும், நியாயாதிபதியாகவும் இருந்தார் என்பதையும் அவன் நினைத்திருக்க வேண்டும். கீழ்ப்படியாமையின் கடுமையான தண்டனைக்காக தவறு அனுமதிக்கப்பட்டது. ஆனால் ராஜாவும் ஜனங்களும் வருந்தி பாடங்களை கற்றுக்கொண்டு அதற்கான ரூபகாரங்களை கொடுத்ததினால், அதிசயத்தக்கவிதமாக தெய்வீக கருணை வந்ததை நாம் காண்போம்.

### வெற்றியாளன் சனகெரிப்

அசீரியா ராஜா பெரிய படைகளுடன் போருக்கு புறப்பட்டான். எருசலேமை முற்றிகைப் போடுவதின் கஷ்டங்களை அறிந்து அவன் போரை அங்கே ஆரம்பிக்கவில்லை. ஆனால் மத்திய தரைக்கடல் கடற்கரையை கடந்து சீதோனியர், பெலிஸ்தியர்களை ஜெயங்கொண்டு யோப்பா மற்றும் இன்னும் தெற்கே சென்றான். பிறகு கிழக்குப் பக்கமாக சென்று யூதாவின் கோட்டை நகரமாகிய லாகீஸுக்கு சென்றான். யூதாவின் நாற்பது பட்டணங்களும் ஒன்றன்பின் ஒன்றாக விழும் என்று தேசம் முழுவதும் பயத்தினால் நிறைந்திருந்தது. எசேக்கியா ராஜா இந்த முற்றிகையை தவிர்க்கும்படி தனது ஆலோசனைக்காரர்களையும் பிரதானிகளையும் சனகெரிப் ராஜாவிடம் அனுப்பினான். அவர்கள் அவனிடம் மன்னிப்பு கேட்டு அவன் விதிக்கிற கப்பத்தை கட்டுவோம் என்றார்கள்.

அபராதத்தொகை அதிகமாக இருந்தது. அதன் மதிப்பு தற்கால ஒரு மில்லியன் டாலர் அளவுக்கு இருந்தது. இது அந்த காலத்தில் மிகவும் அதிகமானதாக இருந்தது. அவன் ஆலயத்திலுள்ள பொன் ஆபரணங்களையும் கேட்டான். அது அவனுக்கு கொடுக்கப்பட்டு விடுதலை கிடைத்தது. வெற்றி கொண்ட சனகெரிப் எகிப்தை தாக்க இருந்தான். அவன் யூதேயாவுடன் செய்த உடன்படிக்கையை முறித்துக்கொண்டு, அவனது தளபதி எருசலேமுக்கு எதிராக நின்று சரணடையச் சொன்னான். அவன் அறிவித்ததாவது: எருசலேமின் ஜனங்களிடம் நாங்கள் வெற்றிக்கொண்டு விட்டோம். உங்கள் தேவன் உங்களை விடுவிப்பார் என்று நம்பாதீர்கள்; அப்படி நம்பின அநேக ஜனங்கள் சனகெரிப் முன்னே தோற்றுப்போனார்கள்.

எருசலேம் எங்கும் பயம் நிலவியது. எசேக்கியா ராஜாவும் அவனது ஆலோசனைக்காரர்களும் போர், சிறைப்படுதல், அனைத்தையும் இழத்தல் என்பதற்காக மாத்திரம் பயப்படாமல் ஜனங்கள் வாசலைத் திறந்து வைத்து சரணடைய சொல்வதற்கும் துணியவில்லை. பிறகு ராஜாவும், அவனது ஆலோசனைக்காரரும், ஜனங்களும் தேவனை ஜெபத்தில் நாடினார்கள்.

கர்த்தர் கிருபையுடன் காத்திருந்தார். எப்பொழுதும் அவரது உண்மையான பிள்ளைகள் பக்கம் அவர் இருக்கிறார். எனினும் ஆறுதலான வார்த்தையை சொல்ல அவர் காலதாமதம் செய்தார். ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி விசுவாசத்தைக் குறித்தும் அவர்களது தேவன் மேல் சார்ந்திருப்பதைப் பற்றியும் ஒரு பாடத்தை கற்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்த்தார். பிறகு கர்த்தரிடமிருந்து பதில் வந்தது. அசீரியா ராஜாவைக் குறித்த தீர்க்கதரிசனம்: "அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை; இதில்மேல் அம்பு எய்வதுமில்லை; இதற்கு முன்பாக கேடகத்தோடு வருவதுமில்லை; இதற்கு எதிராக கொத்தளம்

போடுவதுமில்லை; எனவே கர்த்தர் தமது சொந்த நகரத்தைப் போல பாதுகாப்பார்.” இந்த தீர்க்கதரிசனம் ஜனங்களுக்கு விநோதமாக இருந்தது. எந்த அற்புதத்தால் இது நிறைவேற்றப்படும் என்று அவர்களால் நினைத்து பார்க்க முடியவில்லை. நமக்கான பாடமாவது:

“மர்மமான முறையில் தேவன் இயக்குகிறார்
அவரது அதிசயங்கள் நடைபெற,
கடலில் தமது காலடியை வைக்கிறார்;
புயலின் மேல் சவாரி செய்கிறார். ”

### ஒரே இரவில் ஒரு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் பேர் சங்கரிக்கப்பட்டனர்

அசீரியா பாளையத்தில் கர்த்தருடைய தூதன் அடித்தார் என்று தீர்க்கதரிசி ஏசாயா சுருக்கமாகவும் கவிதை வடிவிலும் கூறுகிறார். எந்த வகையில் என்று கூறவில்லை. காற்றும், அக்கினியும், மின்னலும் கர்த்தருடைய தூதர்கள் என்று வேதவாக்கியங்கள் கூறுவதை நாம் நினைவு கூருகிறோம். சில சமயங்களில் எகிப்தின் வடகிழக்கு பகுதியில் நிலவி வந்த தீவிரமான விஷ சுரம் கூட மரண தூதனால் கொண்டு வரப்பட்டிருக்கலாம். எப்படி அசீரிய படை சங்கரிக்கப் பட்டார்கள் என்பது நமக்கு முக்கியமில்லை.

தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக சகலமும் தெய்வீக வல்லமையில் மாற்றிப்போடப்படுகிறது என்கிற நமக்கான பாடத்தை கவனிக்க வேண்டும். அசீரியா ராஜ்யம் முதலாவது உலக ராஜ்யமாக இருக்கக்கூடாது என்பது தேவனது சித்தமாக இருந்தது. நூறு வருடங்களுக்கு பிறகு பாபிலோன் ராஜ்யத்திற்காக அந்த கனம் வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது தான் தாவீதின் வம்சத்தில் வந்த நிழலான ராஜ்யபாரம் நீக்கப்படுகிற சரியான காலமாக தேவன் நியமித்திருந்தார். அதைக் “கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்” மேசியா வரும்வரை அது இல்லாதிருக்கும்.

நாம் சர்வ வல்லவரின் நிழலில் தரித்திருந்து அவருடன் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்தவர்களுக்கான பாடமாக இருக்கிறது. இப்படி செய்வதின் மூலம் சகலமும் நமது நன்மைக்கு ஏதுவாக நடக்கும்.

### “கர்த்தரின் ஒரு பார்வையில் சத்துருவானவன் பனியைப் போல உருகிப்போவான்”

தூதனால் தோற்கடிக்கப்பட்ட சனகெரிப்பின் கதை நமது மாபெரும் கவிஞர் பைரோன் என்பவரால் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

“ஆடுகளுக்குள்ளே ஓநாயைப் போல அசீரியர்கள் வந்தார்கள்.

அவனது கூட்டாளிகள் இரத்தாம்பரத்தைப் போலவும் பொன்னைப் போலவும் ஜொலித்தார்கள்;

கோடைக் காலத்தின் காட்டின் இலைகள் பசுமையாக இருப்பது போல,

சேனைகள் அவர்களது கொடிகளுடன் சூரிய அஸ்தமனத்தில் காணப்பட்டன.

“இலையுதிர்காலத்தில் காட்டின் இலைகள் பறக்கடிக்கப்பட்டது போல,

சேனைகள் அடுத்த நாள் திகைத்து சாய்ந்து கிடந்தனர் ;

ஏனெனில் மரண தூதன் அழிவில் தனது சிறகுகளை விரித்தான்.

அவன் கடக்கும் போது எதிரிகளில் முகத்தில் மூச்சு விட்டான்.

அனைத்து கூடாரங்களும் அமைதியாயிருந்தது. கொடிகள் மட்டுமே இருந்தன.

ஈட்டிகள் எடுக்கப்படவில்லை, எக்காளம் ஊதப்படவில்லை;

வல்லமையான புறஜாதிகள், பட்டயத்தினால் கவனிக்கப்படவில்லை.

கர்த்தரின் பார்வையில் பனியைப் போல உருகிப் போனார்கள்.”

R4834

## ACCEPTABLE TO GOD
## தேவனுக்கு பிரியமானது

“என் கன்மலையும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும்,
என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக.”

சீரான, தன்னடக்கம் மற்றும் ஒழுக்கமான குணலட்சணம் உடையவர்களின் சரியான சிந்தனை எவ்வளவு அழகாக இருக்கிறது! இவர்களுக்கு மாறாக, அன்பற்றவர்கள் சுயநலம், அநீதி, அன்பின்மை மற்றும் வன்முறை குணமுடையவர்களாக இருக்கிறார்கள்! இயற்கையாகவே நம்மில் விழித்துக் கொள்ளுவது உணர்வுகளும் பாராட்டுதல்களும் மற்றும் வலிகளுமாகும். நல்லொழுக்கத்தை போற்றுதல் மற்றும் அதில் குறைவுபட்டு வெறுப்படைதல் மனிதரிடையே இருக்கிறது. அவர்கள் தேவனுடைய பூர்வ ரூபத்தை இழந்திருக்கிறார்கள். தூய்மையும் பரிசுத்தமுமான தேவனால் எப்படிப்பட்ட கூரிய நோக்குடன் கவனிக்கப்பட்டிருக்கிறார்கள்!

தேவனுடன் பரிச்சயம் இல்லாத உலக மனிதர்கள் தேவனுடைய பார்வையில் எப்படி தோன்றுகிறார்கள் என்பதில் எந்தவித விசேஷித்த கருத்தும் இல்லை. ஆனால் அவரை நேசித்து, அவரது அங்கீகாரத்தை மதிப்பவர்கள் தங்களது நடத்தை அவரது சுத்தமும் பரிசுத்தமுமான சிந்தையில் உறுதிப்பண்ணப்பட எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! உண்மைதான். “மறுபடியும் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள்,” பரம்பரையாக வந்த அபூரணங்கள் மற்றும் குறைபாடுகள் இருந்தாலும் கிறிஸ்து மூலம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் போதுமான அளவு மூடப்படுகிறார்கள். தேவனால் கிறிஸ்துவின் மூலம் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிற அளவீடு, பூரணத்தின் தரநிலையை

அடைய ஆர்வத்துடன் முயற்சி செய்து சாட்டப்பட்ட அவரது நீதியை நாம் பயன்படுத்திக் கொள்ளுகிற அளவுக்கே இருக்கும். இப்படி செய்வதின் மூலம் அவர்கள் தெய்வீக கிருபையின் உண்மையான உணர்ந்துகொள்ளுதலை வெளிப்படுத்துகிறார்கள்.

வன்முறை குணம், அநீதி மற்றும் தொழிலுக்கோ அல்லது கௌரவத்திற்கோ தகுதியற்ற நிலைமைக்கிடையே, உயர்ந்த உன்னதமான குணலட்சணம் உடைய அன்பான நண்பன் தோன்றினால் ஒருவருக்கு எப்படிப்பட்ட குழப்பமும் வருத்தமும் சூழ்ந்திருக்கும்! இன்னும் இப்படிப்பட்டவரின் கண் எப்பொழுதும் நம் மேலேயே இருக்கிறது. இந்த எண்ணத்தை நம் மனதிலிருந்து எந்த அளவுக்கு நீக்கி அல்லது கர்த்தரின் கருத்தையும் அங்கீகாரத்தையும் குறைவாக மதிப்பிட்டால் விழுந்துபோன சுபாவத்தின் தீய குணங்கள் கலகம் பண்ண அனுமதிப்போம்.

**“வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்”**

பழைய சுபாவத்தின் கீழான போக்கை உணர்ந்து, மேலே சொல்லப்பட்ட சங்கீதக்காரனின் ஜெபம், அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளின் மனங்களில் எப்படி தொடர்ந்து சொல்லப்பட வேண்டும்! விழுந்து போன சுபாவத்தின் பரம்பரையான துன்மார்க்கம் அடக்கப்படுதல் எப்படி நிறைவேற்றப்படும் என்று ஒருவர் கேட்கிறார். எரிச்சலூட்டும் சூழ்நிலைகளில் வன்முறை குணத்தை கட்டுப்படுத்துவது ஒருவருக்கு கடினமாக இருக்கும். ஏனெனில் மற்றவர் கிசுகிசுக்கும் நாவுக்கு கடிவாளம் போட வேண்டும். வாழ்க்கையின் சோதனைகளுக்கு ஓரளவுக்கு அவர்களது வண்ண கண்ணாடியை போடுகிறார்கள். எப்படிப்பட்ட பரம்பரை பலவீனங்களின் சேனைகள் இருக்கின்றன. அவைகளை தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் உணர்ந்து, அவர்கள் தேவனுக்கு பிரியமாக இருக்க வேண்டும் என்றால், அதற்கு எதிராக பாடுபட வேண்டும். நமது இருதயத்தின் சிந்தனைகள் சக மனிதர்களிடம் வார்த்தைகள் அல்லது கிரியைகளினால் சொல்லப்படும் வரை வெளிப்படுத்தப்படாது. ஆனால் நமது இருதயத்தின் அனைத்து சிந்தனைகளும் நோக்கங்களும் தேவனுக்கு வெட்டவெளிச்சமாயிருக்கின்றன. நேர்மையான இருதயம் உள்ளவர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு ஆறுதல்!

சங்கீதக்காரன் மறுபடியும் கேட்கிறதாவது: “வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்?” அவர் கூறுகிற பதிலாவது: “உமது வசனத்தின்படி தன்னை காத்துக் கொள்ளுகிறதினால் தானே.” பிறகு அவர் நமக்கு ஏற்படுத்துகிற தீர்மானமாவது: “உமது கட்டளைகளை தியானித்து, உமது வழிகளை கண்ணோக்குகிறேன். உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன். உமது வசனத்தை மறவேன்.” (சங்கீதம் 119:9,15,16) இங்கே தேவனுக்கு பிரியமான சுத்தமான உன்னதமான வாழ்க்கையின் இரகசியம் இருக்கிறது. ஜெபத்தினாலும், தீர்மானங்களினாலும் மாத்திரமல்ல, அதோடு கூட ஜாக்கிரதையாகவும் கடினமாகவும் பின்பற்றுகிறதாலும், சுயவளர்ச்சியினால் முறைப்படியான விடா முயற்சியினாலும், தீமையான சிந்தைகளை அக்கறையுடனும் விடா முயற்சினாலும் நீக்குவதினாலும், சுத்தமான உயர்ந்த நற்குணங்களை தொடர்ச்சியாக வளர்ப்பதினாலும், பாவகரமான வார்த்தைகள் மற்றும் கிரியைகளை வளர்த்து அறுப்பதற்கு முன்னரே மொட்டிலேயே கிள்ளி எறிதல் மூலமும் அது அடையப் பெற வேண்டும்.

ஆனால் மேலும், இந்த அக்கறை அல்லது கவனம் நமது விழுந்து போன சுபாவத்தின் தரநிலைக்கேற்ப அல்ல, தேவனுடைய வசனத்தின்படி செலுத்தப்பட வேண்டும். நமது வாழ்க்கையை சோதிப்பதில் தரத்தில் அதிகமான வித்தியாசத்தை ஏற்படுத்துவோம்.

சங்கீதக்காரன் இந்த தரத்தைக் குறித்து மேலும் கூறுகிறதாவது; “கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.” (அதாவது தேவனுடைய பிரமாணத்தின்படி நமது வழியை தெரிந்து கொண்டோமானால், அது நம்மை பாவத்தின் பாதையிலிருந்து நீதியின் பாதைக்கு முற்றிலுமாக மாற்றும்.) கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை (சாந்தமுள்ள, போதிக்கக்கூடியவர்களுக்கு நீதியின் பாதைகளை தெரிவித்து) ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் (சட்டங்கள், கட்டளைகள்) செம்மையும், (தவறில்லாத நீதியின் விதிகள்) இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும் கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுற பயம் சுத்தமும், (அடிமைத்தன பயம் அல்ல, அன்பின் ஜெனிப்பித்தலின் உன்னத பயம் - அவரது நீதியான அங்கீகாரத்திலிருந்து விழுந்துபோகக்கூடிய பயம்) என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் (கர்த்தருடைய பிரமாணமும் சாட்சியும்) உண்மையும் அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்தும் ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது.”

**“துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும்”**

“அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். (வழியில் வருகிற ஆபத்துக்களிலிருந்தும், சத்துருவின் கண்ணியிலிருந்தும் கிருபையில் வளருவதை தடுக்கக்கூடிய அனைத்திலிருந்தும்) அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. (தவறிழைக்கக்கூடிய தனது சொந்த தீர்மானத்தினாலும் தேவனுடைய பிரமாணத்தின் தரநிலை இல்லாமல்) தன் பிழைகளை உணருகிறவன் யார்?”

ஆனால் இந்த தரநிலைப்படி நம்மை ஆராய்ந்து பார்த்தால் நமது குறைபாடுகளை கண்டுபிடித்து விடுவோம். சங்கீதக்காரன் ஜெபத்தை நினைவுகூருவோம்: “மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.” இப்படியாக நமது ஜெபத்தின் மூலம் நமது முயற்சிகளுக்கு துணை சேர்ப்போம். (சங்கீதம் 19:9-12)

இந்த ஜெபத்தின் இன்னொரு பகுதி இருக்கிறது. அதை கர்த்தர் நமது வாயில் வைக்கிறார்; அது கூறுகிறதாவது; “துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆட்கொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாக்கியிருப்பேன்.” துணிகரமான பாவங்கள் எப்படிப்பட்ட பாவங்கள் என்று நாம் கவனிப்போம். துணிகரம் என்பது எந்தவித அதிகாரமும் இல்லாமல் சாதாரணமாக எடுத்துக்கொள்ளுதல். ஆகையால் துணிகரமான பாவம் என்பது சாதாரணமாக எடுத்துக்கொள்ளுவது மற்றும் தேவன் வெளிப்படுத்தாததை சத்தியம் என்று வலியுறுத்துவது அல்லது அவர் வெளிப்படுத்தியிருப்பதை மாற்றுதல். தேவனுடைய அதிகாரம் இல்லாமல் தவறிழைக்கக்கூடிய மனித காரணத்தின் அடிப்படையில் ஏதாவது ஒரு போதனையை தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி என்று உறுதியாக உரிமை கொண்டாடுவது தான் துணிகரமான பாவமாக இருக்கும்.

வேத வாக்கியங்களுக்கு எதிராக நித்திய ஆக்கினை உண்டு என்று தேவதூஷணமான போதகத்தை தைரியமாக போதித்து தெய்வீக குணலட்சணத்தை துர்பிரச்சாரம் செய்கிறவர்களது பாவம் இந்த வகையானது. இந்த வகையில் பங்கு பெறுகிற அநேக பெரிய மற்றும் சிறிய பாவங்கள் இருக்கின்றன. இங்கே சொல்லப்பட்ட வார்த்தைகள் குறிப்பிட்ட தவறை குறிப்பதாக தெரிவிக்கிறது. அதற்குள் சறுக்கிவிழும் அபாயம் இருக்கிறது. “நான் பெரும்பாதகத்துக்கு நீங்கலாகியிருப்பேன்.” அப்போஸ்தலர்கள் கூட மரணத்துக்கேதுவான பாவத்தை குறிப்பிட்டார்கள். (1 யோவான் 5:16; எபிரேயர் 6:4-6; 10: 26-31) அப்படிப்பட்ட பாவம், நமக்கு இரட்சிப்பு கொண்டு வரும் தேவனுடைய அன்பின் மீது அனுமதித்ததாகும். அவர் நியமித்திருக்கிற வழி, அதாவது நமது இரட்சிப்புக்காக சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற கிறிஸ்துவின் இரத்தம் மூலம் நாம் தெரிந்தே மறுக்க வேண்டும்.

**“கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான்”**

துணிகரமான பாவங்களுக்கு நம்மை விலக்கிக் காக்கும்படி நாம் ஜெபித்து முயற்சிக்க வேண்டும். இவை பெருமையின் பாவங்கள் அல்லது தேவனுடைய சித்தத்துக்கு பணிவுடன் கீழ்ப்படியாமல் சுயசித்தத்தில் பிடிவாதமாக இருத்தல். பிரியமானவர்களே, பெருமை மற்றும் சுய சித்தம் அல்லது எழுப்பட்டதற்கு மேலாக நீதிமானாக இருக்கும் மனோ பாவம் அல்லது தேவன் வாக்குத்தத்தம் பண்ணாததை கொடுக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ளுதல் ஆகியவற்றில் சிறிதளவான போக்குக்குக்கூட எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விழுகையை முன்னறிவிக்கிற பெரும் மற்றும் ஆணவத்தின் ஆவியை ஆரம்பித்திலேயே கவனித்து எதிர்த்தால், “பெரும்பாதகத்துக்கு நாம் நீங்கலாயிருப்போம்.”

“கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்கள் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருக்கிறான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.” (சங்கீதம் 1:2-3) நாம் தேவனுடைய வசனத்தை தியானிக்கும் முக்கிய பொருளாக கொள்வோமானால், அதன் கொள்கைகள் சீக்கிரத்தில் ஒருங்கிணைந்து, நமது குணலட்சணத்தை தேவனுக்கும் சக மனிதர்களுக்கும் மிகவும் அழகானதாகவும் பாராட்டத்தக்கதாகவும் ஆக்கும். மனதின் இந்த பழக்கத்திற்கு இசைவாக வாழ்க்கையின் செயல்கள் பேசும்.

சுத்திகரிக்கப்பட்ட நீரூற்று, முந்தையதைக் காட்டிலும் சுவையான தண்ணீரைக் கொடுக்கும். அதனோடு தொடர்புக்கு வருகிற அனைவருக்கும் புத்துணர்ச்சியையும் நல்ல உற்சாகத்தையும் கொடுக்கும். அது நல்ல கணவன்கள், நல்ல மனைவிகள் மற்றும் நல்ல குழந்தைகள் அடங்கிய சந்தோஷமான குடும்பங்களை ஏற்படுத்தும். அது கோபத்தை இனிமையாக்கி, குரலை மென்மையாக்கி, பேச்சை கண்ணியமுள்ளதாக்கி, ஒழுக்கத்தை வளர்த்து, மனோபாவத்தை உயர்த்தி, எந்த சிறிய கடமையிலும் அழகான கிருபையை கொடுக்கும். அது அன்பின் கொள்கைகளை கொண்டு வந்து, சுயநலத்தின் மறுபாடான அம்சங்களை நீக்கும். இப்படியாக அது குடும்பத்தை பூஞ்சோலையாக ஆக்கும். அங்கே ஒவ்வொரு நற்குணம் மற்றும் கிருபைக்கும் இடங்கொடுத்து விரிவடைந்து வளரும்.

அது தனிப்பட்டவர்களையும் குடும்ப வாழ்க்கையும் மட்டும் சாதகமானதாக ஆக்காமல், வியாபாரத்திற்கும் சென்று, உண்மை மற்றும் நியாயமான செயல்பாடுகள் மூலம் சகல வியாபார உறவுகளை முறைப்படுத்தும். இப்படியாக தேவன் அவரது நாமத்தையும் அவரது ஆவியையும் பெற்றிருக்கிறவர்கள் மூலமாக கனப்படுத்தப்படுவார்.

நாம் இந்த அபூரண சரீரத்தில் இருக்கும் வரை பூரணத்தில் உச்சத்தை எட்ட முடியாது. ஆகையால் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையினிடத்திலும் தெரியக்கூடிய தொடர்ச்சியான கிருபையின் வளர்ச்சி இருக்க வேண்டும். முன்னேறும் ஒவ்வொரு படியும் உயர்ந்த சாதனையை அடையும் படிக்கல்லாக கருதப்பட வேண்டும். தேவனுடைய சாயலில் தெரியக்கூடிய வளர்ச்சி இல்லையென்றால் அல்லது பின்தங்கிய போக்கு இருந்தால் அல்லது கவனக்குறைவான நிலை இருந்தால் அதுவே எச்சரிக்கைக்கு காரணமாக இருக்கும்.

நமக்கு உதாரணத்திற்காக கர்த்தராகிய இயேசு வைத்திருக்கிற மாதிரியை நமது கண்களுக்கு முன்னால் நாம் தொடர்ந்து வைத்திருப்போமாக. அந்த மாதிரி தேவனுடைய சித்தத்தின் முழுமையான நிறைவேறுதலாகும். அதில் பிரமாணமானது குறைவில்லாமல் கடைபிடிக்கப்பட்டது. நாம் அவரது நீதி மற்றும் சுய பலியின் அடிச்சுவடுகளை பின்பற்றுவோமாக. முழுமையான அன்பின் வைராக்கியம், உண்மைத்தன்மை மற்றும் தேவனிடத்தில் விசுவாசமாயிருத்தல் ஆகியவை அதைச் செய்ய நம்மை சாத்தியப்படுத்தும். நாம் இப்போது தெய்வீக அங்கீகாரத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட உணர்வையும், ஏற்ற காலத்தில் தெய்வீக சலுகையின் மகிமையான பரிசையும் பெறுவோம்.

R4835

# THE REWARDS OF SACRIFICE
# பலியின் வெகுமானம்

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." ரோமர் 12:1

நமது பூமிக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் பலி கொடுக்கும்படி இந்த வேத வாக்கியத்தில் எங்கேயும் நமது கர்த்தரால் நாம் கட்டளையிடப்படவில்லை. வேறு வார்த்தையில் சொல்வோமானால் நியாயமும் நீதியும் ஒன்றுதான். பலி, தன்னைத்தான் வெறுத்தல், சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்றுதல் ஆகிய அனைத்தும் தெய்வீக சட்டத்திற்கு அப்பாற்பட்டது. நியாயப்பிரமாணமானது அதை கடைபிடிக்கிற அனைவருக்கும் நிரந்தரமான மானிட ஜீவனை வழங்கியது. இந்த உடன்படிக்கை செய்யப்பட்ட யூதர்களில் யாரும் இந்த பிரமாணத்தை கடைபிடிக்க முடியவில்லை. பரிபூரண மானிட சரீரம் வழங்கப்பட்ட பரத்திலிருந்து வந்த ஒருவர் மட்டுமே அதனிமித்தம் அதை பின்பற்ற முடிந்தது. ஆகையால் பூமிக்குரிய நித்திய ஜீவனுக்குரிய உரிமையை பெற முடிந்தது.

புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கை, மெய்யான மத்தியஸ்தரின் கீழ் அதன் தேவைகளை பூர்த்தி செய்கிற அனைவருக்கும் அதே மானிட நித்திய ஜீவனை கொடுக்கும். முதலாவது நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் இதன் மேன்மை என்னவென்றால், மனுக்குலத்திற்கு ஆக்கினைத் தீர்ப்பு, மரணம் மற்றும் பலவீனத்திலிருந்து விடுவிக்க தகுதியுள்ள மற்றும் அவருடைய "மேலான பலிகளின்" மூலம் அதிகாரம் பெற்ற ஒரு மேலான மத்தியஸ்தரை பெற்றிருப்பதேயாகும்.

ஆனால் இயேசு, நியாயப்பிரமாணத்தின் கீழாக பிறந்து, அதன் நிபந்தனைகளுக்கு கடமைப்பட்டவராயிருந்து, அதை நிறைவேற்றினதினால் பூமிக்குரிய நித்திய ஜீவனை பெற்று அதற்கு மேலாகவும் செய்தார். அவர் அந்த பூமிக்குரிய ஜீவனையும் பலியிட்டு அதைக் கொடுத்து, தமது பாதுகாப்புக்காக லேகியோன் தூதர்களை அழைக்க வல்லமை பெற்றிருந்தும், எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் தமது பலியின் புண்ணியத்தை பாவ மனிதர்கள் எடுத்துக்கொள்ளுமாறு அனுமதித்தார். இதுவே அவரது பலி, அவர் பாவகரமான பலவீன பலியை செலுத்தவில்லை. ஏனெனில் அப்படிப்பட்ட பலவீனத்தை அவர் பெற்றிருக்கவில்லை. அவர் தமது பரிபூரண ஜீவனையும் மற்றும் அவரது அனைத்து சட்டப்பூர்வமான உரிமைகளையும் சலுகைகளையும் பலி கொடுத்தார். இப்படி அவர் செய்ததற்காக அவர் பெற்ற மானிட சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டது, தூதர்கள் துரைத்தனம் அதிகாரங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டது ஆகும். (எபேசியர் 1:20) இப்படியாக உயர்த்தப்பட்டு, அவர் பெற்றிருந்த மானிட உரிமைகளை (அது பறிமுதல் செய்யப்படாதிருந்தது) ஆதாமுக்கும் அவரது இனத்திற்கும் மீட்கும் விலைக்கிரயமாக கொடுத்தார். இந்த யுக முடிவில் இவைகளை அவர்களுக்கு புது நியாயப்பிரமாண உடன்படிக்கையை முத்திரையிட்டு உபயோகிப்பார். இதன் கீழ் முதல் மனிதனின் கீழ்ப்படியாமையினால் இழந்த அனைத்தும் சகல மனுக்குலத்திற்கும் மற்றும் இஸ்ரயேலுக்கும் திரும்பக் கொடுக்கப்படும். இடைப்பட்ட காலத்தில் மகிமையடைந்த இரட்சகர் அந்த பலியின் புண்ணியத்தை (முடிவில் உலகத்திற்கு கொடுக்க இருந்ததை) விசுவாச வீட்டாரின் கறைகளை மூடுவதற்கு பயன்படுத்துவார். இவர்கள் தெய்வீக அழைப்பை கேட்டு, இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றவும், மாம்சத்தில் அவரோடு கூட பலி செலுத்தவும், பாடுபடவும் அதன் மூலம் திரைக்கப்பால் ஆவியின் தளத்தில் அவரோடு கூட மகிமையடைந்து ஆளுகை செய்யவும் அதை ஏற்றுக்கொண்டவர்கள்.

### பாவ நிவாரண பலிகள் சுவிசேஷ யுகத்தில் மட்டுமே ஏற்புடையவைகள்

இந்த சுவிசேஷ யுகம் முழுவதும் நியாயப்பிரமாண உடன்படிக்கை யூதர்கள் மேல் மட்டுமே தொடர்ந்தது. மீதமிருந்த உலகத்தார் தேவனோடு எந்த உடன்படிக்கையும் இல்லாமல், எதிர்காலத்தில் புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக இருக்கப்போகிற "இளைப்பாறுதலின் காலங்களுக்கு" காத்திருக்கிறார்கள். (அப்போஸ்தலர் 3:19-21; எரேமியா 31:31-34) இந்த சுவிசேஷ யுகத்தில் ஒரு குறிப்பிட்ட விசுவாச வகுப்பாரை அழைத்து, அவர்களது மீட்பருடன் பலியின் மரணத்தில் பங்கு பெறும் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்கிறார். உண்மையுள்ளவர்களாக அவரது அங்கங்களாக அல்லது அவரது மணவாட்டியாக, அல்லது கனம், மகிமை மற்றும் சாகாமையுடன் அவரது ராஜ்யத்தில் உடன் சுதந்தரர்களாக இருப்பார்கள். எல்லா மனிதர்களுக்கும் தெய்வீக சித்தத்தை அவர்கள் அறிந்த அளவுக்குத்தக்கதாகவும் (தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து நியாயம் எது) திராணிக்குதக்கதாகவும் தேவனுடைய பிரமாணம் அல்லது நீதியின் தேவையை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளார்கள். ஆனால் இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்ற விருப்பம் உள்ளவர்கள் நியாயத்திற்கு மேலாக தாங்கள் என்ன செய்யக்கூடும் என்பதை காண்பிக்கிறார்கள். ஆனால் அதிகமாக செய்யும்படி கட்டளையிடப்படவில்லை. சகல பலியும் ஒரு சலுகை, ஒரு கடமையல்ல, ஒரு கட்டளையல்ல. இதற்கு இசைவாக பரிசுத்த பவுல் கட்டளையாக அல்ல, ஆனால் வேண்டுகோளாக எழுதுகிறார்: "சகோதரரே உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று....... வேண்டிக்கொள்ளுகிறேன்." அவர் இதை கட்டளையாகக் கூறவில்லை. இதை ஒரு கட்டளையாக ஆக்கினால் பலியின் சந்தர்ப்பத்தை தடுப்பதாக இருக்கும். நாம் பலியிடுவது கட்டளையிடப்பட்ட ஒன்று அல்ல. தேவனால் கட்டளையிடப்பட்டவை எல்லாம் கடமை, பலியல்ல.

பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் பூமிக்குரிய உரிமைகளை கைவிட்டு தங்கள் சரீரங்களை, தங்களது ஜீவன்களை கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் பலி கொடுக்கவில்லை. ஏன்? ஏனெனில் இது கொல்லுகிற ஒன்று. மற்றது தேவனுக்கு ஏற்புடைய ஒரு பலியாக ஒரு ஜீவியை பலியிடுதல். இயேசுவின் பலிக்கு முன்னதாக மானிட பலிக்காக தேவன் அழைப்பு கொடுக்கவில்லை. தேவன் அபூரண, கறைபடிந்த ஜீவிகளை தமது பலிபீடத்தில் ஏற்றுக்கொள்ள விருப்பம் இல்லாதவராக இருந்தார். அவர்கள் தங்களை பலியாக கொடுக்கலாம். ஆனால் தேவன் அவற்றை பலியாக எண்ணவில்லை. இயேசு ஒரு பலியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். ஏனெனில் அவர் பூரணராக இருந்தார். அவரது சீஷர்களும் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து பலிகளாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில் மீட்பரின் பலியின் புண்ணியம் சாட்டப்பட்டதினால் அவர்கள் பூரணர்களாக இருக்கிறார்கள். அவரது புண்ணியம்

அவர்களது கறைகளை நீக்குவதற்கு போதுமானதாக இருக்கிறது.

இதனால் இந்த சுவிசேஷ யுகம் "கர்த்தரின் அனுக்கிரக காலம்" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இந்த சுவிசேஷ யுகத்தில் தேவனால் முன்னறிவிக்கப்பட்ட எண்ணிக்கையிலானவர்களை இயேசுவின் உடன் சுதந்தரராக ஏற்றுக்கொள்ள விருப்பம் உள்ளவராக இருக்கிறார். முன்னறிவிக்கப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் நிறைவடைந்தவுடன் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காலம் நிறைவடைந்து விடும். அதன் பிறகு எந்த அர்ப்பணமும் பலியாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏனெனில் மெய்யான பாவ நிவாரண நாள் முடிவடைந்திருக்கும்.

ஆனால் ஒரு வேளை ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய காலம் முடிந்த பிறகு சிலர் தங்களை அர்ப்பணம் செய்தால், அவர்களது நிலைமை எப்படி இருக்கும். அவர்களுடனான தேவனுடைய செயல்பாடு எப்படி இருக்கும்?

தேவன் மாறாதவராயிருப்பதால், அவருடைய சிருஷ்டிகள், அவரது சித்தத்தை செய்வதற்கு முழுவதுமாக, தடையின்றி தங்களை ஒப்புக்கொடுத்தால் அவர் அதில் எப்பொழுதும் பிரியப்படுவார் என்று நாம் அனுமானிக்க வேண்டும். இதே போல பலியின் உடன்படிக்கை அமலுக்கு வருவதற்கு முன்பு, பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் விசுவாசத்துடன் தங்களது ஜீவன்களை கொடுத்ததில் அவர் பிரியப்பட்டார். தேவன், தங்களது ஜீவன்களை அர்ப்பணித்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களுக்கு மானிட பூரணத்தை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறது போல சபை நிறைவடைந்த பிறகு, பலி ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முடிவடைந்த பிறகு, இதே மார்க்கத்தை கடைபிடிப்பவர்களுக்கு அதே மானிட பூரணத்தை அளிப்பார் என்று நாம் கூறலாம்.

இதே போல, இந்த யுக முடிவில் மரணம் வரை விசுவாசமாயிருந்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாமல் இருந்தால் அவர்கள் ஆவிக்குரிய தளத்தில் உயிர்த்தெழுதலை அடையமாட்டார்கள். ஆனால் அவர்கள் இந்த யுகம் ஆரம்பிப்பதற்கு முன்பு அபிவிருத்தி அடைந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரரின் வகுப்பில் அங்கங்களாக வருவார்கள்.

### தன்னை அர்ப்பணம் பண்ணுதலே எப்பொழுதும் புத்தியுள்ள ஆராதனை

இந்த உண்மைகளின் அடிப்படையில், தேவனை நேசித்து, அவருடன் முழுமையான ஐக்கியத்தில் இருக்க விரும்புகிற, இந்த யுகம் முழுவதும் இருக்கப்போகிற அனைவருக்கும் எங்களது ஆலோசனையாவது: "சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்." அவர்கள் தங்களை பலியாக ஒப்புக் கொடுத்த பிறகு, தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டு, புதிய சிருஷ்டிக்கு ஆவியின் ஜெனிப்பித்தலை அருளுவார் என்று நாங்கள் உறுதி கூற முடியாது. ஆனால் இது புத்தியுள்ள ஆராதனை என்றும், தேவனிடமும் அவரினிமித்தமும் தங்களது விசுவாசத்தையும், உண்மைத் தன்மையையும் வெளிப்படுத்துகிறவர்களுக்கு பெரிய வெகுமானங்களை எப்பொழுதும் தருவார் என்று உறுதி கூறுகிறோம். நாங்கள் புரிந்து கொண்ட பிரகாரம் நாங்கள் அவர்களுக்கு கூறுவதாவது: பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் வகுப்பார் தேவனால் கனப்படுத்தப்பட்டு பூரண மானிட தளத்தில், "பூமியெங்கும் பிரபுக்களாக வைக்கப்படுவார்கள்" என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன. இந்த பிரபுக்கள் வகுப்பார் மீதியுள்ள மனுக்குலத்தாரை காட்டிலும் முன்னுரிமை பெற்று, காணக்கூடாத மேசியா வகுப்பாருக்கு ஆயிரம் வருடங்கள் விசேஷித்த பிரதிநிதிகளாக இருப்பார்கள். இந்த மகிமையான வேலையில் பங்கு பெற்ற பிறகு, இந்த பிரபுக்கள் ஆயிர வருட யுக முடிவில், மெய்யான லேவியர்களாக ஆவிக்குரிய தளத்திற்கு உயர்த்தப்படுவார்கள் என்று நாம் உறுதியளிக்கிறோம்.

தெரிந்து கொள்ளப்பட்டவர்களது தொகை எப்பொழுது நிறைவடையும் என்பது யாருக்கும் தெரியாததால், எல்லாமே ஒரே மாதிரியாக ஆர்வத்துடன் தங்களது ஜீவனை தேவனுடைய ஊழியத்துக்காகவும் அவரது சத்தியத்துக்காகவும் கொடுக்க வேண்டும். நமது உள்ளத்தில் நமது பரிசின் தன்மையைக் குறித்து நிச்சயமின்மை இருப்பதினால் நாம் ஊழியம் செய்ய மறுப்போம். நாம் தேவனுடைய தயவுக்கு நமது தகுதியின்மையைக் காண்பிப்போம். ஏனெனில் அவருக்கு ஏற்புடையவர்களாக இருக்க வேண்டும். நமது ஊழியம் பரிசை பெறுவதற்காக இருக்கக்கூடாது. ஆனால் நீதிக்கு ஊழியம் செய்கிறவர்களாகவும் தேவனை பிரியப்படுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும். "தேவனே, உமது சித்தித்தின்படி செய்ய விரும்புகிறேன்." எல்லாம் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நினைவுகூருதலின் காலத்தில் அர்ப்பணம் செய்த அனைவரும் தங்களது அன்பு, விசுவாசம், கீழ்ப்படிதல், உண்மைத்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும். மீட்பரின் மரணத்தை அடையாளப்படுத்துவதின் மூலமும் கிறிஸ்துவின் பாடுகளில் தங்கள் பங்கை பெறுவதற்கான தங்கள் விருப்பத்தை காண்பிக்கவும், "பிட்கப்பட்ட அப்பத்தின்" மூலமும் அவரது பாடுகளின் பாத்திரத்தில் பங்கு பெறுவதின் மூலமும் அடையாளப்படுத்த வேண்டும்.

நமது பிள்ளைகளுக்காக நாம் எவ்வளவு எதிர்பார்க்க வேண்டும் என்பது வேறு காரியம். நமது குழந்தைகள், தேவனுக்கு பிரியமாகவும் ஏற்புடையதாகவும், தேவனுக்கும் சத்தியத்திற்கும் தங்களது விசுவாசத்தை விளங்கப்பண்ணுவது எந்த வயதில் என்று கூறுவது நமது காரியமல்ல. பெற்றோர்களாக இருப்பவர்கள் சகல நியாயமான வழிகளிலும் உதாரணம் மற்றும் கட்டளைகள் மூலமாக கர்த்தருடைய ஊழியத்தில் சலுகையை உணர்ந்து கொள்ளுவதில் மரண பரியந்தம் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். மேலும் அவர்களது பிள்ளைகள் வாரவாரமோ, முடிந்தால் தினமுமோ சத்தியத்தின் பல்வேறு அம்சங்களை அவர்கள் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு போதிக்க வேண்டும். குழந்தைகள் இளம் வயதில் அவர்களது மனதும் இருதயமும் கொஞ்ச அளவுக்கு மட்டுமே அபிவிருத்தி அடைந்திருக்கும் என்பதை தேவன் அறிவார். ஆகையால் பெற்றோர்கள், தங்களது பிள்ளைகளை முடிந்தவரை சிறந்தவைகளை செய்ய வைத்து, பலனை தேவனிடம் விட்டு விட வேண்டும். ஞானமான, நேர்மையான அவர்களது தீர்மானங்கள் எதுவாக இருந்தாலும், பூமிக்குரியதாக அல்லது பரத்துக்குரியதாக இருந்தாலும் அதை முழு திருப்திகரமாக செய்ய வைக்க வேண்டும். ஒருவரது தற்கால வாழ்க்கையில் சோதனைகள் வெற்றிகரமாக முடிந்து மரணத்திற்கு செல்லாமல் யாரும் உயிர்த்தெழுதலில் உடனடி பூரணத்தை பெற இயலாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனினும் மீதமுள்ள மனுக்குலத்திற்கு முன்னரே காண்பிக்கப்பட்டது போல் மகிமையான சந்தர்ப்பங்களையும் சத்தியங்களையும் அவர்களுக்கு முன்பாக பெற்றிருப்பார்கள்.

R4836

# THE WORK OF GRACE IN THE HEART

# இருதயத்தில் கிருபையின் கிரியை

" கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது." 2 கொரிந்தியர் 5:14

நெருக்கி ஏவுகிறது என்பது ஒன்றாக இழுத்தல், ஒன்றாக வைத்திருத்தல் என்ற இரு கருத்தை உடையதாக இருக்கிறது. அப்போஸ்தலர் தனது செயல்பாடுகளை மறுபரிசீலனை செய்து, அவரது சில மார்க்கம் சமநிலையற்ற மனதை குறிப்பிட்டதை காண்கிறதாக கூறினார். இது அப்படியல்ல என்று அவர் விவரிக்கிறார். ஏனெனில் அவர் முன்பிருந்ததைக் காட்டிலும் தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றிருந்ததாக கூறினார். அவர் தான் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்டிருப்பதாகவும் கிறிஸ்துவின் அன்பினால் அவரையும், சுத்தமான இருதயத்துடன் அவருடையவர்களா -யிருக்கிறவர்களையும் அன்பு செலுத்த நெருக்குவதாகவும் அவர் உணருகிறார்.

ஏன் இந்த அன்பின் கட்டுப்படுத்துதல்? அதற்கான காரணம்: நாம் அனைவரும் மரித்தவர்களாக எண்ணப்பட்டால், பிறகு நம் அனைவருக்கும் ஜீவனை அளிப்பவரின் சேவை தேவையாக இருக்கிறது. கிறிஸ்து நம் அனைவருக்காகவும் மரித்திருப்பாரானால். அவர் மூலமாக நாம் ஜீவனுக்குள் வந்திருப்போமானால், இதன்பிறகு நாம் மாம்சத்தின்படி வாழக்கூடாது. நாம் முற்றிலுமாக மாம்சத்தை விட்டுக்கொடுத்து, கிறிஸ்து மூலம் நாம் பெற்றிருக்கிற புது வாழ்க்கையை வாழவேண்டும். பரிசுத்த பவுல் இப்படியாக கூறலாம்: நான் பைத்தியக்காரனல்ல; ஆனால் நாம் கிறிஸ்துவினால் நெருக்கமாக இழுக்கப்பட்டு, அவர் மற்றவர்களுக்காக பெற்றிருந்த அதே அனுதாப அன்பை நானும் பெற்றிருக்கிறேன். அவர் சகோதரர்களுக்காக தமது ஜீவனை கொடுத்தது போல, நானும் கொடுப்பேன்.

நமது கர்த்தரின் அன்பு அவரது சீஷர்களிடம் விசேஷமாக வெளிப்படுத்தப்பட்டது. முக்கியமாக அவரிடம் வைராக்கியமாகவும் உற்சாகமாகவும் இருந்த பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபிடம் அன்பாயிருந்தார். இதுபோலவே, சபையானது போதிக்கப்பட்டது. உலகத்திற்காக நாம் ஜீவனை கொடுக்க வேண்டும் என்ற போதனை இல்லை. ஆனால் விசுவாச வீட்டாருக்காக ஜீவனை கொடுக்க வேண்டும் என்று போதிக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் பலியின் பலன்கள் உலக மனுக்குலம் முழுவதற்கும். ஆதாமின் இனத்தில் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்று நாம் பார்க்கிறோம்.

கர்த்தர் தம்மை காட்டிக்கொடுக்கப் போகிறவன் யார் என்பதை ஆரம்பத்திலிருந்து அறிந்திருந்தாலும் மற்றும் தெய்வீக அறிவு இரண்டாம் மரணத்திற்கு போகிறவர்கள் யார் என்பதையும் அறிந்திருந்தாலும், தேவன் அவர்களுக்காக ஏதாவது செய்வார் என்று நாம் நினைக்கக்கூடாது. வேறு வார்த்தையில் சொல்லுவோமானல் தேவனுடைய ஆசீர்வாதம் "உத்தம இஸ்ரயேலர்களுக்கு" மட்டுமேயாகும். அவரிடம் நல்லிணக்கத்திற்கு வருகிறவர்கள் மிகுந்த ஆசீர்வாதங்களையும் கர்த்தரின் தயவுகளையும் பெறுவார்கள். இவர்கள் இரட்சிப்பின் வேலையில் சேர்க்கப்படுவார்கள்; அவர்களில் ஏதோ இருக்கிறது என்பதற்காக அல்ல, கர்த்தர் அவர்கள் மேல் வைத்த அன்பினால் ஆகும். அந்த அன்பை பெறுகிற அனைவரிடத்திலும் அது விசாலமாகவும் ஆழமாகவும் இருக்கிறது. ஆனால் தேவன் துன்மார்க்க குணலட்சணம் உள்ளவர்களை நேசிக்கமாட்டார். இப்பொழுது அவருடைய பிள்ளைகளாக இருக்கிறவர்களுக்கு மட்டுமே அவரது ஆசீர்வாதம் கிடைக்கும் அல்லது அவரது ஆசீர்வாதங்களுக்கும் சலுகைகளுக்கும் கீழாக இருக்கிறவர்களுக்கு பிற்பாடு அவர்களுக்கு அளிப்பார். நமது திராணிக்கு தக்கதாக அனைவரையும் வாழ்த்துவது நமது கடமையாகும்.

### நமது பயிற்சிக்கான முக்கிய நோக்கம் அன்பின் அபிவிருத்தி அடையவே

நமது நெறிதவறிய குணங்களை மறுரூபப்படுத்தி, அன்பு என்கிற தெய்வீக சாயலுக்கு திருப்பி கொண்டு வருவதே இந்த சுவிசேஷ யுகத்தில் சபைக்கான கிருபையின் வேலையாக இருக்கிறது. இந்த மறுரூபமாகுதலை அடைய தவறுகிறவர்கள், தேவனைக் குறித்த அவரது சித்தத்தை அடைய தவறுகிறவர்கள், சுவிசேஷத்தில் நமக்காக வைத்திருக்கிற பரிசை வெல்ல தவறுவார்கள். தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலை உருவாக்குவதற்கு ஆரம்பத்தில் நாம் மிகவும் கீழானவர்களாகவே இருக்கிறோம். நாம் "மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம்." (எபேசியர் 2:3) தகப்பனாகிய ஆதாம் மீறுதலுக்கு உட்படுவதற்கு முன்பு பெற்றிருந்த பூர்வ தேவ சாயலை கடந்த ஆறாயிர வருட காலங்களில் வருத்தத்துடன் இழந்திருக்கிறோம். ஆகையால் நம்மை அன்பின் தெய்வீக சாயலில் காண்பதற்கு பதிலாக, "பாவத்திலும் துர்குணத்திலும் உருவானதாக" நாம் காண்கிறோம். சுபாவத்தில் அன்பு நமது குணலட்சணத்தை ஆளும் கொள்கையாக இருப்பதற்கு பதிலாக தெய்வீக குணங்கள் அழிக்கபட்டு தீமை, சுயநலம், சுய அன்பு ஆகியவற்றினால் மாசுபட்டதாக காண்கிறோம். அது தெய்வீக குணத்தின் சாரமாகிய சுயநலமற்ற அன்புக்கு நேரடியான விரோதியாக இருக்கிறது.

"ஒன்றான மெய் தேவனாகிய உம்மை அறிவதே நித்திய ஜீவன்." (யோவன்17:3) தேவன் அன்பாக இருக்கிறார். தேவனை அறிந்துகொள்ளுவது என்றால் அவரது அன்பான திட்டத்தையும் குணலட்சணத்தையும் அறிந்து கொள்வதாகும். தேவனை அறிவது என்பது தேவனுடனான தனிப்பட்ட அறிமுகமும் அவரது குணலட்சணத்தை அறிவுடனான உணர்ந்துகொள்ளுதலுமாகும். இதை யாரும் தேவனுடைய ஆவியில், பரிசுத்தத்தின் ஆவியில், அன்பின் ஆவியில் பங்கு பெறாமல் பெற முடியாது. இந்த பரிசுத்தத்தின் ஆவியையும், அன்பின் ஆவியையும் உடனடியாக பெற முடியாது. அது ஒரு வளர்ச்சி. அதன் அபிவிருத்திதான் பிரதானமான நோக்கமும் முழுமையாக தேவனை அறிந்து கொள்ளுகிறவர்களின் நம்பிக்கையுமாக இருக்கிறது. அதனிமித்தம் அவர்கள் நித்திய ஜீவன் என்ற பரிசைப் பெறுவார்கள்.

நமது சிந்தை அல்லது சித்தம் மறுரூபமடைதல் என்பது நமது சரீர மறுரூபமடைதலோ அல்லது இழந்ததை திரும்ப பெறுதலோ அல்ல. நாம் மாம்சத்தில் இருக்கும் வரை நாம், நமது பரம்பரை பலவீனம் மற்றும் சுயநலம் மற்றும் பாவத்தின் மனோபாவத்திற்கு எதிராக நாம் போராட வேண்டும். இந்த கூர்மையான மற்றும் தொடர்ச்சியான மோதல், ஒரு விசேஷித்த, ஜெயங்கொள்ளுகிற ஒரு வகுப்பை தெரிந்து கொள்ளுகிறது மாத்திரமல்ல, ஆயிர வருட யுகத்தில் விரும்பத்தக்க குணலட்சணத்தை அபிவிருத்தி பண்ணுகிற செயல் முறையைக் காட்டிலும் மிக சீக்கிரமாக விரும்பத்தக்க குணலட்சணத்தை அபிவிருத்தி பண்ண செய்கிறது. அதனிமித்தமாக உலகத்தை பூரணப்படுத்த ஆயிர வருடம் தேவைப்படும் போது, "சிறு மந்தைக்காக" ஒழுங்கு செய்யப்பட்ட விசேஷித்த போதனைகள் மற்றும் தீவிரமான

ஒழுக்கத்தின் விசேஷித்த பயிற்சியின் மூலமாக பரிசுத்தவான்களை பூரணப்படுத்த சில வருடங்களே போதுமானதாக இருக்கிறது. ஆனால் சில வருடங்களிலோ அல்லது பல வருடங்களிலோ, சத்துருவுடன் குறைவான போராட்டத்தினாலோ அல்லது அதிகமான போராட்டத்தினாலோ, குணலட்சண மறுரூபமடைதலும், மெருகேற்றுதலும் நிறைவேற்றப்பட வேண்டும். நமது ஓட்டத்தை சந்தோஷத்துடனும் நித்திய மகிமைக்கான நல்ல நம்பிக்கையோடும் முடிப்போமானால் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக நமது சித்தத்தின் அன்பின் சாயல் நாம் நாட வேண்டியதின் முடிவாக இருக்கிறது.

### அன்பின் பாடத்தை நாம் முற்றிலும் கற்க வேண்டும்

தேவனுடைய அன்பை நமது இருதயங்களில் பெற்றிருந்தால், அது நமது வாழ்க்கையின் அனைத்து காரியங்களையும் ஆளுகை செய்து நமது சிந்தனைகள், செயல்கள் மற்றும் வார்த்தைகளில் நம்மை தேவனைப் போல உருவாக்கும். கிறிஸ்துவின் பள்ளியில், நமது ஆண்டவர் ஒவ்வொரு நாளும் நமக்கு போதிக்கும் பாடம் அன்பு ஆகும். நாம் "பரம அழைப்பின் பந்தயப் பொருளை" அடைய வேண்டுமானால், இந்த அன்பின் பாடத்தை முற்றிலுமாக கற்க வேண்டும்.

கிறிஸ்துவின் பள்ளியில் தெய்வீக வார்த்தையின் அறிவுறுத்தல்கள் மற்றும் அருளப்படுகிற அனைத்தும், அன்பின் திசையில் நமது இருதயம் மற்றும் நடத்தையை அபிவிருத்தி பண்ணுவதற்காகவே நோக்கங் கொண்டிருக்கிறது. சாந்தம், தயவு, பொறுமை, முதலான கனிகள் மற்றும் கிருபைகள் ஆவியின் வெளிப்படுத்தல்களாக இருக்கின்றன. எனினும் பரிசுத்த ஆவி இந்த வெளிப்படுத்தல்களுக்கு முன்பாக இருக்க வேண்டும். ஆவி பூரணமாக இருந்தாலும் வெளிப்படுத்தல்கள் அபூரணமாக இருக்கலாம். திராட்சை செடி நல்லதாக இருக்கலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட பருவத்தில் அது முதிராததாக இருக்கும். இதே போல ஆவியின் கிருபைகளில் கூட இருக்கலாம். அவைகள் இருதயத்தின் உள்ளான நிலைமையின் வெளியரங்கமான வெளிப்படுத்தல்களாக இருக்கின்றன. இந்த கிருபைகள் முதிர்ச்சி அடைவதற்கு முன்னதாக இவைகள் முதிர்ச்சி அடையலாம். உண்மையிலேயே இந்த கிருபைகள் திரைக்கு இந்த பக்கம் பூரணமே அடையாது.

நாம் அர்ப்பணம் பண்ணும் அந்த கனத்தில், அதற்கு முன்பாக ஆவியின் கனிகளை பெற்றிருந்தாலும், பூரண அன்பின் அளவில் இருந்திருக்கமாட்டோம். நாம் அறிந்திருக்கிற வகையில், நாம் அர்ப்பணம் பண்ணப்பட்டு, சரியான ஆவியை பெற்றிருந்தோம். ஆனால் நம்மால் எதிர்பார்க்கப்பட்டது என்ன என்று அறியக்கூடிய அறிவு போதுமானதாக இல்லாதிருந்தது. இதற்கு நமக்கு கொஞ்சம் அபிவிருத்தி கிறிஸ்துவின் பள்ளியின் சில போதனைகள் தேவைப்பட்டது. கிறிஸ்துவை பின்பற்ற வேண்டிய அறிவு படிப்படியாக நமக்கு வந்தது. சித்தம் அறிவுடன் வைக்கப்பட்டால் சரியான அன்பின் அடையாளத்தை அடைவோம். இந்த இருதய நிலைமை உண்டாக்குகிற குணலட்சண கிருபையின் வெளிப்பாடுகள் தற்கால வாழ்க்கையில் பரிபூரணமாக இருக்க முடியாது. ஆனால் பரிபூரண சரீரத்தை பெறும் போது மட்டுமே நாம் பெற முடியும். இந்த நிலைமையை பெற்றிருக்கிற இருதயம் பூரணமாயிருக்கும். இந்த நிலைமையை மறுபுறத்தில் மட்டுமே பெற முடியும்.

### "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்." எனினும் பூரணம் மாம்சத்தில் சாத்தியம் அற்றது

நாம் செய்கிற தொழில்களில் வெளிப்படுகிற ரூபகாரங்களில் நாம் ஒருவரையொருவர் அங்கீகாரம் பண்ண வேண்டும். ஒரு தோட்டக்காரர் தனது திராட்சை செடியிடம் சென்று, வெவ்வேறு கிளைகளிலும் திராட்சை பழத்தை பார்ப்பது போல, கர்த்தர் இருதயமானது நல்ல கனியை கொடுக்க வல்லதா என்பதை அறிவார். கர்த்தரிடம் வெளியரங்கமாக அர்ப்பணம் செய்து ஊழியம் பண்ணுகிறவர்களில், தங்களது அர்ப்பணத்திற்கு இசைவாக வாழ்கிறவர்கள் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற அனைவரும் நம்மால் அறியப்பட்டு, அங்கீகரிக்கப்படுவது போல, நாமும் அவர்களால் அதே போல் அங்கீகரிக்கப்படுவோம். "அவர்களது கனிகளினாலே அவர்களை அறிவோம்." அவர்களது கீழ்ப்படிதலினாலே முழுமையாக கனிகள் அபிவிருத்தி அடைந்ததினால் அல்ல. ஆகையால் நாம் கனிகளின் முழுமையான அபிவிருத்திகளினால் அல்ல, கீழ்ப்படிகிற அளவினாலும் கர்த்தருக்கு கீழ்ப்படிய முயற்சிப்பதினாலும் நாம் ஒருவரையொருவர் அறிவோம்.

முழுமையான பூரணம் என்பது சிந்தனை, சொல் மற்றும் செயலில் பூரணம் என்பதாகும். தற்காலத்தில் அது நமது நிலைமை அல்ல. இப்பொழுது நம் இருதயங்களில் அன்பின் பூரணத்தை பெற முடியும். அதாவது தேவனுக்கான, சத்தியத்துக்கான மற்றும் சகோதரருக்கான பூரண அன்பு. பூரண அன்பு பலிக்கு வழிநடத்துகிறது. "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." (யோவான் 14:15) பூரண அன்பை பெற்றிருக்கிறவர்கள் தங்கள் பலியை நிறைவேற்றுவார்கள். ஆனால் எந்த நேரத்திலும் ஒருவர் பூரண அன்பிலிருந்து அந்நியப்படுதலுக்கும் எதிர்ப்புக்கு செல்லக்கூடும். அந்த நபரின் இருதயத்தில் அன்பின் நிலைமை குளிரடையக் கூடும். படிப்படியாக அவர் கர்த்தரிடமிருந்து பிரிந்து, "திரள் கூட்டத்திற்கு" உரியவராக குறிப்பிடப்படலாம். பிறகு ஆபத்துக் காலத்தின் தண்டனையினால் அவர் சீர்த்திருத்தப்படவில்லை என்றால், அவர் இரண்டாம் மரணத்திற்கு கடந்து செல்வார்.

அன்பின் கிருபையினால், தேவ ஆட்டுக்குட்டியினால் மீட்பின் விலைக்கிரயம் சகல மனுக்குலத்திற்காகவும் கொடுக்கப்பட்டு, சபைக்கு அவரது புண்ணியம் சாட்டப்படும். பிறகு பாவத்திலிருந்து நம்மை விடுவிப்பதற்கு பல்வேறு படிகளாகிய தெய்வீக குணலட்சணமாகிய அன்பின் குணலட்சணத்திற்கு நம்மை அபிவிருத்தி செய்யும். இது தெய்வீக அளவீட்டின்படி, பிரியமானவர்களாக பிதாவானவருக்கு முன்பாகவும் நித்திய ஜீவனாகிய அவரது கிருபைக்கும் கொண்டு வரும். அப்படியானால், நாம் "தேவனால் போதிக்கப்படுவதும்" அந்த குணலட்சண அபிவிருத்தியும் எவ்வளவு முக்கியமனாது!

உலகத்திற்கான கிருபையான கிரியை, ஆயிரம் வருட யுகத்தில் தேவனுடைய கிருபையான குணலட்சணமும் சகலருக்குமான இரட்சிப்புக்கான அவரது ஏற்பாடுகளும் சகல மனுக்குலத்திற்கு அறியப்பண்ணப்படும். விருப்பம் உள்ள அனைவரும் பாவத்தின் சீரழிவிலிருந்து அன்பாகிய பூரண குணலட்சணத்திற்கு மாற்றப்படுவார்கள்; மனுக்குலம் தேவ சாயலுக்கு மீண்டும் மாற்றப்படும். அவர்களது சித்தத்தின் இந்த மாற்றம் படிப்படியான மாம்சீக மாற்றங்களுடன் இணைந்திருக்கும். இது அவர்களை பாவத்தின் கறைகளிலிருந்தும், பரம்பரையான பலவீனங்களிலிருந்தும் நீக்கும். பாவம் மற்றும் அதன் தீமையான விளைவுகளை வெறுக்க செய்து தேவ சாயலுக்கு கொண்டு வரும்.

R4837

# A GODLY YOUNG KING
# தெய்வ பக்தியுள்ள இளமையான ராஜா

2 நாளாகமம் 34: 1-13

“வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை.” பிரசங்கி 12:1

கடந்த பாடத்தில் நாம் பார்த்த மனாசே ராஜாவுக்கு ஆமோன் என்ற கெட்ட குமாரன் இருந்தான். அவன் இரண்டு வருடம் அரசாண்டான். அவன் தன் நீதிமன்ற உறுப்பினர்களாலே அவனது அரண்மனையிலேயே கொல்லப்பட்டான். அவனது மகன் யோசியா, தனது எட்டு வயதிலே ராஜாவானான். இன்றைய பாடம் அவனைப் பற்றியதாகும். அவன் தனக்கு பதினாறு வயதாகும் போது தேவனை தேடி அவருக்கு ஊழியம் செய்ய விரும்பினான். அவன் இருபது வயதானபோது மத நம்பிக்கை இன்னும் அதிகமாகி, அவன் ராஜாவாக சீர்திருத்த வேலைகளை தைரியமாக செய்ய ஆரம்பித்தான். சிலைகளையும் அதன் கோவில்களையும் விக்கிரக தோப்புக்களையும் உடைத்து நொறுக்கிப் போட்டான். இன்னோம் பள்ளத்தாக்கு, முன்னரே பரிந்துரைக்கப்பட்டது போல, அழிக்கப்பட்டு எருசலேமின் குப்பைக்கிடங்காக மாற்றப்பட்டது.

கர்த்தரின் ஆலயம் பழுது பார்க்கப்பட்டு, விக்கிரக தீட்டுகள் அனைத்தும் சுத்திகரிக்கப்பட்டு, சர்வ வல்லவரின் ஆராதனை ஸ்தலமாக சீர்படுத்தப்பட்டது. இது மாத்திரமல்ல, ராஜா தனது ராஜ்யத்துக்கு வடக்கேயிருந்த இரண்டு கோத்திரத்தாரின் எல்லைகளிலும் இருந்த பலிபீடங்களையும் விக்கிரக தோப்புக்களையும் நொறுக்கிப் போட்டான்.

### காட்டு ஓட்ஸ் (Wild Oats) முதலாவது விதைக்கப்பட வேண்டும் என்று கருதுவது தவறு

“வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை” என்கிற நமது தலைப்பு வசனத்தில் எப்படிப்பட்ட வலிமை இருக்கிறது! சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் நீதியை புரிந்து கொண்டு அதற்கு ஊழியக்காரர்கள் ஆவதற்கு முன்னரே அவர்கள் “காட்டு ஓட்ஸை” விதைக்கக்கூடிய அனுபவம் பெற வேண்டும் என்று விரும்புவது எவ்வளவு பெரிய தவறாக இருக்கிறது! இந்த கருத்து ஆண், பெண் இளைஞர்களிடம் பிரதிபலிக்கிறது. அவர்கள் தங்கள் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை நாடுவது அரிதாகவே இருக்கிறது. பரிசுத்தமுள்ள தாய்மார்கள் தற்செயலாக, தங்கள் பிள்ளைகள் உலகத்தின் எந்த வழியில் நடக்கக்கூடாது என்பதை அறிமுகப்படுத்தி அவர்களது பாதங்களுக்கு கீழாக கண்ணிகளை வைக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர்கள் தங்கள் மனோபாவத்தை இப்படிக் கூறி வெளிப்படுத்தினார்கள். “இந்த பிள்ளைகள் மேல் சிலுவையின் பாரத்தை நான் வைக்கக்கூடாது. புனிதத்துவத்தை எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் தேவனுடைய அர்ப்பணம் பண்ணப்பட்ட பரிசுத்தவான்களாக ஆகும் போது, அவர்கள் சோதனைகளையும், “இடுக்கமான பாதை” மற்றும் இன்னும் அநேக காரியங்களையும் அறிந்து கொள்ளுவார்கள்.”

ஐயோ! இப்படிப்பட்ட கிறிஸ்தவ தாய்மார்கள் நிலைமையை சரியானபடி புரிந்து கொள்ளவில்லை. தற்காலத்தில் “இடுக்கமான பாதையைத்” தவிர வேறு எதிலும் உண்மையான சந்தோஷம் இல்லை என்பதை அவர்கள் உணர தவறியிருக்கிறார்கள். சுயதிருப்தி, பெருமை, ஆசை, பாவம், சுயநலம் அடங்கிய “விசாலமான பாதை” தூரத்திலிருந்து பார்க்கும் போது, அது கானல் நீர், அதை அடைய முடியாது, அது ஒரு மாயை. சுயநலம், பெருமை முதலானவைகளின் விசாலமான பாதையில் செல்லக்கூடியவர்கள் தங்களால் முடிந்தவரை சந்தோஷத்தை தேடுகிறார்கள். அந்த பாதையில் செல்லக்கூடிய இலட்சக்கணக்கானவர்களில் எவ்வளவு பேர் சந்தோஷத்தை அடைந்திருந்திருக்கிறார்கள்? அவர்கள் வெறும் சந்தோஷத்தை தேடுகிறவர்களாக இருக்கிறவர்களேயொழிய சந்தோஷத்தை அடைந்தவர்களாக இல்லை. உலகத்திலே உண்மையான சந்தோஷம், நிஜமான சந்தோஷம் சுயபலியாகிய இடுக்கமான பாதையில், மாபெரும் போதகரின் அடிச்சுவட்டில், சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின்பற்றுவதில், அவர் ஜீவனை கொடுத்தது போல நாமும் ஜீவனைக் கொடுப்பதில் “அவரோடு பாடுபட்டால், அவரோடு ஆளுகை செய்வோம்” என்பதில் “அவராடு கூட மரித்தால், அவருடனே கூட பிழைத்தும் இருப்போம்” என்பதில் இருக்கிறது.

விசாலமான பாதையில் செல்கிறவர்களில் சிலர் மட்டுமே இடுக்கமான பாதைக்கு வருகிறார்கள். விசாலமான பாதையே சந்தோஷமும் களிப்புமான ஒரே பாதையாக இருக்கிறது என்கிற தவறான புரிந்துகொள்ளுதலை பெற்றோர்களும், நண்பர்களும், கிறிஸ்தவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தலைகீழாக காணும் பொழுதுதான் இடுக்கமான பாதைதான் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய விரும்பத்தக்க பாதை என்பதை நினைக்கிறார்கள்.

### ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் இருக்கக்கூடிய ஒரு குறிப்பிட்ட எளிமை மற்றும் நேர்மை

விசாலமான பாதையில் நடந்த பிறகு, இடுக்கமான பாதையை காண்கிறவர்கள் கூறுகிறதாவது: “நான் ஏன் சத்தியம், சந்தோஷம், சமாதானம் மற்றும் மகிழ்ச்சியின் பாதையை முதலில் காணவில்லை!”

சீரழிந்த நிலையில் நாம் அனைவரும் பிறந்திருந்தாலும் ஒரு குறிப்பிட்ட எளிமையும் நேர்மையும் ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் தோன்றுகிறது. இந்த கொள்கையைத்தான் ஒவ்வொரு போதகரும் உதவிக்காரரும் பொதுவாக பயன்படுத்த வேண்டும். ஒரு குழந்தை சரியான வழியில் வழிநடத்தப்பட்டால், அந்த குழந்தை சீக்கிரத்திலே தனது சிருஷ்டிகருடன் உறவையும் நல்இணக்கத்தையும் அடையும். ஒரு ஆசான் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. சில சமயங்களில் தேவ கிருபையினால் பரத்திலிருந்த செய்தியானது இருதயத்தை அடைந்து அதிக எதிர்ப்பின்றி இழுக்கப்படுகிறதாக தெரிகிறது. வாழ்க்கையின் புனிதத்தன்மை உணரப்படுகிறது. பரத்திலிருந்து ஞானம் தேவைப்படுவது உணரப்படுகிறது. ஒரு வேளை ஊழியனிடமிருந்து, ஒரு வேளை பெற்றோரின் வழிமுறைகள் மூலம், ஒரு வேளை ஒரு கைப்பிரதி அல்லது ஒரு புத்தகம் மூலம் ஆகும். இளைய மனதிற்கு ஞானத்தின் வழி காண்பிக்கப்படுகிறது. கர்த்தரிடத்திற்கும், இடுக்கமான பாதைக்கும் வழி காண்பிக்கப்படுகிறது.

தெய்வீக கிருபையின் கீழாக, சித்தமே நமது விதிக்கு

உண்மையான இயக்குனராக இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சித்தமானது சரியாக வழிநடத்தப்பட்டு, நிலைநிறுத்தப்படுவது தான் முக்கியம். இன்றைக்கு அநேகர் தேவனிடமிருந்து விலகி, பாவம் மற்றும் சுயநலம் என்கிற விசாலமான பாதையில் இருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கையின் மார்க்கம் மற்றும் நிலைமை அனுதாபம் அற்ற அநேக நல்ல குணங்களை உடையவர்களாக இருக்கிறார்கள். வழிநடத்த, வழி காட்ட சித்தம் இல்லாமல் அவன் கீழே செல்கிறான். சிலர் இதே போல இடுக்கான பாதையில் இருப்பவர்கள் பரம்பரையான மாம்சீக, மனதளவில் மற்றும் ஒழுக்கத்தின கறைகளினால் விசாலமான பாதையை நோக்கி இழுக்கப்படுகிறார்கள். ஆனால் கர்த்தரின் இடுக்கமான பாதையில் வைக்கப்பட்டிருப்பவர்கள் மாம்சத்தின் சுயசித்தத்தினால் அல்ல, புதுப்பிக்கப்பட்ட சித்தத்தின் வல்லமையினால் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இளமையில் நமது சித்தம் சரியாக இயக்கப்பட்டு, பொருத்தப்படுதல் எவ்வளவு முக்கியம்! எவ்வளவு ஆசீர்வாதத்தை தற்கால வாழ்க்கையில் அனுபவிக்கிறோம்! எதிர்கால வாழ்க்கைக்கு தேவையான ஆயத்தங்கள் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது!

யோசியா ராஜாவின் இன்றைய பாடத்தை ஒவ்வொரு இளைஞனும் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. முதலாவதாக, இளமையிலேயே தீங்கு நாட்களும் தீய அனுபவங்களும் வருவதற்கு முன்னரே ஒருவர் தீமையை கற்றுக்கொண்டு, அது பிற்காலத்தில் வாழ்க்கையையே அழிப்பதற்கு முன்னரும் இருதயமானது கர்த்தருக்கு கொடுக்கப்பட வேண்டும். பிறகு யோசியா ராஜாவைப் போல, நீதிக்கு ஊழியம் பண்ண காலம் நமக்கு சந்தர்ப்பத்தை கொண்டு வரும் போது நீதியை சிநேகிக்கவும், தீமையை எதிர்க்கவும் நாம் முழு மனதுடன் இருப்போமாக. எல்லா காரியங்களிலும் தேவனை ஸ்தோத்தரிக்கவும், தேவனே எல்லாவற்றிலும் நமக்கு முதலாவதாக இருக்கவும் வேண்டும்.

**R4838**

## "STUDY TO SHOW THYSELF APPROVED"

## "உன்னை உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." 2 தீமோத்தேயு 2:15

இந்த வசனம் "வேதவாக்கியங்களை படி" என்று சொல்லவில்லை. ஆனால் "உன்னை உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்று கூறுகிறது. தேவன் எதை அங்கீகரிப்பார் என்பதை அறிய கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது அவர் வெளிப்படுத்தியிருக்கிறவைகளை முதலாவது படிக்க வேண்டும் என்று அது பொருள்படுகிறது. வேத வாக்கியங்களைப் பற்றி கொஞ்சம் அறிவுக்கு வந்த பிறகு, அவைகளை தியானம் செய்து, அந்த வசனம் வாழ்க்கையின் எந்த காரியத்துக்கு பொருந்தும் என்பதை கவனிக்க வேண்டும். நாம் தொடர்புக்கு வருகிற ஒவ்வொன்றையும் அது நன்மையானதா அல்லது தீமையானதா என்பதை ஆராய வேண்டும். இங்கே "ஜாக்கிரதையாயிரு" என்கிற வார்த்தை "அப்போஸ்தலர், அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும்" என்று கூறுகிற கருத்துக்கு ஒப்பாயிருக்கிறது.

இந்த சொற்றொடரின் மையக்கருத்து, மனிதனால் அல்ல. தேவனால் அங்கீகரிக்கப்படுவதை குறிக்கிறது. நல்ல மனிதர்களாலும் நல்ல ஸ்திரீகளாலும் நாம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது சரியானதாக இருக்கிறது. ஆனால் நமது பாடம் இந்த நோக்கத்தில் இல்லை. முதலாவது நாம் தேவனை சந்தோஷப்படுத்த, தேவனால் அங்கீகரிக்கப்பட ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதில் சிந்திக்கக்கூடிய பாடம் இருக்கிறது என்பதை நாம் கவனிக்கிறோம். தாவீது கூறுகிறதாவது: "உம்முடைய வேதத்தில் நான் இரவும் பகலும் தியானமாயிருக்கிறேன்." அந்த வேதம் தன்னில் கிரியை நடப்பிக்கும் அதன் நீளம், அகலம், ஆழம், உயரம் எவ்வளவு என்பதை பார்ப்பதாகக் கூறுகிறார். தேவனை பிரியப்படுத்துவதே நமது பிரதானமான நோக்கமாக இருக்க வேண்டும் என்பதே இங்கே அப்போஸ்தலரின் கருத்தாக இருக்கிறது.

"சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதித்தல்" என்பது சத்திய வார்த்தையை சரியானபடி பொருத்துவது என்று பொருள்படுகிறது. அது எங்கே, எப்படி, எப்பொழுது பயன்படுத்தப்பட வேண்டும். இந்த சத்திய வார்த்தையின், தேவனுடைய வார்த்தையின் தெய்வீக நோக்கம், திட்டம், எண்ணம் என்ன என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். நமது கர்த்தர் வரும் வரை, தேவனுடைய செய்தி பழைய ஏற்பாட்டின் வேத வாக்கியங்கள் மூலமாக கொடுக்கப்பட்டு வந்தன. பிறகு பரத்திலிருந்து வந்தவரால் தேவனுடைய செய்தி உறுதி பண்ணப்பட்டது. நமது கர்த்தர் தமது வாயாக இருந்து சத்திய வசனத்தை அபிவிருத்தி பண்ணவும், அறிவின் வார்த்தையை அபிவிருத்தி பண்ணவும், தெய்வீக திட்டத்தின் விளக்க வார்த்தையை அபிவிருத்தி பண்ணவும் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை விட்டுச் சென்றார். ஆகையால் தீமோத்தேயு எல்லாவற்றையும் கர்த்தருடைய செய்தியாக அங்கீகரித்து கவனத்தை செலுத்தக்கூடியவராக இருந்தார். உதாரணத்திற்கு, தேவனுடைய செய்தியின் ஒரு பகுதி கடந்த காலத்துக்குரியதாகவும், ஒரு பகுதி யூதர்களுக்கு மட்டும் பொருந்தக்கூடியதாகவும் இன்னும் ஒரு பகுதி கிறிஸ்தவர்களின் தற்கால வாழ்க்கைக்கும் இன்னும் வேறு பகுதி அவர்களது எதிர்கால நம்பிக்கைக்கும் பொருந்தக் கூடியதாகவும் இருக்கிறது.

### நமது முற்பிதாக்களைக் காட்டிலும் நாம் தெளிவான வெளிச்சத்தை பெற்றிருக்க வேண்டும்

காரியங்கள் நமக்கு முன்பாக நிதானமாக பகுத்து கிடைப்பதால், சரியான புரிதலையும் நமது காலத்துக்கு தேவையான விசேஷித்த வெளிச்சத்தையும் நாம் பெறுகிறோம். நமது பிதாக்களைக் காட்டிலும் சிறப்பாக வேத வாக்கியங்களை பகுக்க நம்மால் முடிகிறது. இதன் மூலம் நாம் பிதாக்கள் காணாத, சபையின் ஆவிக்குரிய ஆசீர்வாத பாகமாகிய "பரம அழைப்பையும், மானிட பாகமாகிய உலகத்தின் ஆசீர்வாதமாகிய" இழந்ததை திரும்ப பெறுதலையும் நாம் காண முடிகிறது. சபைக்கும் உலகின் ஆசீர்வாதத்துக்கும் உபயோகிக்கக்கூடிய காலங்கள் மற்றும் வேளைகளையும் கூட காணக்கூடியவர்களாக இருக்கிறோம். நமது நாளில் சத்திய வசனத்தை பகுத்து போதித்தல் கர்த்தருடையதாக காணப்படுகிற அறிவாற்றலையும்

வசனத்தின் மேல் வீசச் செய்கிற எந்த வெளிச்சத்தையும் எடுத்துக்கொள்ள அவசியப்படுத்துகிறது. இப்படியாக நாம் சத்திய வசனத்தை பகுத்து போதிக்க சாத்தியமாகிறது. பழைய ஏற்பாட்டின் வேத வாக்கியங்கள் எல்லாம். ‘‘தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினவைகள்’’ என்பதையும், கர்த்தர் கூட அப்போஸ்தலர்களைக் குறித்து, ‘‘பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளை கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்’’ என்று கூறியதையும் நாம் எப்பெழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு, சத்திய வழியில் வழிநடத்தவும், வரக்கூடிய காரியங்களை அறிவிக்கவும் வாக்குத்தத்தம் பண்ணினார் என்பதை நாம் மறக்கக்கூடாது. நம்மை உத்தமனாக நிறுத்தவும், போதகத்தை தியானித்து அதை நமது மார்க்கத்திற்கு இசைவுபடுத்தவும், கிறிஸ்துவின் சிலுவை வீரரின் கடமைகளை உண்மையுடன் செய்யவும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ வீரன் சிறிய காரியத்தையும் கூட அவனது அழைப்புக்கு நன் மதிப்பு உண்டாகும்படி நிறைவேற்ற ஜாக்கிரதைப்பட வேண்டும். கிறிஸ்தவ வீரன் பக்கவாட்டில் செல்லாமலிருக்க தனது கடமைக்கு சம்பந்தமில்லாத காரியங்களில் சிக்கிக்கொள்ளாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

சில சொந்த அல்லது உலக நன்மைக்காக தனது கடமையிலிருந்து தவற நாடும் கிறிஸ்தவ வீரன் விசுவாசமற்ற வீரனாக மாறுகிற அளவுக்குத்தக்கதாக தனது தர வரிசையிலிருந்து விழுந்து போகக்கூடியவனாக இருப்பான்.

‘‘உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதைப்படு:’’ வசனத்தை தியானி; உன்னையே பரிச்சயமாகிக்கொள்ளும் அளவுக்கு உன்னையே தியானம் பண்ணு; ஊழியம் பண்ண உன்னுடைய திறமைகள் எவை, அவைகள் எந்த திசையில் இருக்கின்றன, உன்னுடைய பலவீனங்கள் எவை, அவற்றிலிருந்து எவ்வாறு பாதுகாக்கப்படலாம் என்பதை நிதானிக்க வேண்டும். அதாவது நமது திறமைகளையும் குறைவுகளையும் நிதானிக்க வேண்டும். உங்கள் தவறுகளை தவிர்க்கவும் அறிவீனமான அனைத்து கேள்விகளையும், அசுத்தமான மற்றும் வீணான பேச்சுக்களையும் தவிர்க்கவும் பயில வேண்டும். ‘‘தேவனுடைய உறுதியான அஸ்திபாரம், நிலைத்திருக்கிறது’’ என்பதையும் மற்ற அஸ்திபாரங்கள் எல்லாம் பிரயோஜனமற்றது என்பதையும் மற்ற கோட்பாடுகள் எல்லாம் ஒன்றுமில்லாமல் போகும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் ‘‘தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்பதும் கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன் என்பதும் அதற்கு முத்திரையாயிருக்கிறது.’’ (2 தீமோத்தேயு 2:19)

### நமக்கு சாட்டப்பட்ட நீதி மேலும் மேலும் உண்மையாகும்படி நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்

‘‘ஜாக்கிரதையாயிரு’’ என்ற வார்த்தையில் மிகுந்த அர்த்தம் இருக்கிறது. இந்த தெய்வீக கட்டளை கிறிஸ்துவில் விசுவாசிகளாக இருந்து, அவரது ஊழியத்துக்கு தங்களது ஜீவனை அர்ப்பணித்திருக்கிற சபையாருக்கு கொடுக்கப்படுகிறது என்பதை கவனிப்பது மிகவும் முக்கியமானது. பாவத்திலிருந்து சுத்திகரிப்பு என்று கருதப்பட்டது நிறைவேறின பிறகு நமது திராணிக்கு தக்கதாக, கருதப்பட்ட இந்த சுத்திகரிப்பை, இந்த சாட்டப்பட்ட நீதியை, உண்மையான காரியத்தை ஆராயும் வேலைக்கு முழுமையான சகல முயற்சியையும் கொடுக்க வேண்டும். நாம் உண்மையிலேயே நீதிமான்களாக ஆவதற்கு முன்னரே, நாம் நீதிமான்களாக கருதப்படுவது முற்றிலுமாக தேவ கிருபையே. நமது இருதயத்தைக் கவனித்து, அதன் உள்ளே பார்த்து, நமது நல்ல மாற்றம் நேர்மையான நோக்கத்தை மாத்திரமல்ல, தேவன் அங்கீகரிக்கிற வழியில் நீதிமானாக ஆவதற்கான நமது விருப்பத்தையும் முயற்சிகளையும், கிரியைக்கான சித்தத்தையும் தேவன் அங்கீகரிக்கிறார். சாபத்திலிருந்து நாம் மீட்கப்பட்டு, ஒப்புவராகுதலுக்கான அவரது கிருபையான ஏற்பாடுகளை நாம் ஏற்றுக்கொண்டதிலிருந்து நாம் நீதிமான்களாகவும், அவரது பிள்ளைகளாகவும் கருதப்படுகிறோம்.

### நாம் ஏற்றுக்கொண்டதை கனப்படுத்தும் விதமாக நமது வாழ்க்கை இருக்கும்படி நாம் ஜாக்கிரதையுடன் இருப்போமாக

சகல பழைய புளிப்பாகிய பாவத்தை நீக்கும்படி தினமும் முயற்சி செய்ய நமது இருதயங்களை ஜாக்கிரதைப்படுத்த பார்ப்போமாக. அது நம்மில் இருக்கும்படியும் கிரியை நடப்பிக்கவும் அனுமதிக்காதபடி நாம் உறுதியுடன் இருக்க வேண்டும். இல்லையென்றால் நீதியின் மேலுள்ள நமது அன்பு நமது மார்க்கத்தினால் பலவீனமடைவதை நாம் ரூபகாரப்படுத்துவோம். புளித்த திரளானவைகளை தடுத்து, அவற்றை திரும்பத் திரும்ப அனுமதிக்காமல், அவர்களது சிந்தைகள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளை ‘‘ஆவியின் கனிகளாகிய’’ அன்பு, சந்தோஷம் மற்றும் சமாதானம் முதலியவற்றால் சுத்திகரித்து, பாவத்தை தொடர்ந்து எதிர்த்து அதை முற்றிலுமாக நீக்குகிறவர்கள் களிப்படைவார்கள்.

ஜாக்கிரதையுள்ளவர்கள் மட்டுமே தெய்வீக அங்கீகாரம் மற்றும் ஏற்புடைய வழியை காண்பார்கள். நாம் ஏற்றுக்கொண்டதை கனப்படுத்தும் விதமாக நமது வாழ்க்கை இருக்கும்படி நாம் ஜாக்கிரதையுடன் இருப்போமாக. தீமையின் தோற்றத்திலிருந்து கூட நாம் விலகியிருக்க வேண்டும். நாம் நமது சகல உரையாடல், நமது நடத்தை, நமது சிந்தை, நமது உதடுகள் மற்றும் நமது வாழ்க்கையிலும் நாம் தீமையை புறக்கணிக்கிறோம். ஒவ்வொரு கடமையிலும் தயாரான மனதுடனும் சந்தோஷம் மற்றும் களிப்பான இருதயத்துடன் விடா முயற்சியுடன் இருக்க நாம் ஜாக்கிரதையாக இருப்போமாக. நாம் போர்வீரர்கள் என்பதையும் உண்மையான கிறிஸ்துவின் போர்வீரர்களாய் ‘‘தீங்கனுபவிக்க’’ கற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது.

ஒரு போர் வீரனுக்கு அற்பமான கடமைகளும் உண்டு. அவன் தனது ஆயுதத்தை மெருகேற்றும் போதும், உணவு தேடும் போதும், உணவை சமைக்கும் போதும், முகாமை சுத்தப்படுத்தும் போதும், படை கடந்து செல்வதற்காக பாலம் கட்டும் போதும் எதிரிகளிடம் போரிடுவதைப் போல தனது கடமையைச் செய்கிறான். இவைகளெல்லாம் தற்செயலான வேலை. மேலும் அவன் ஏற்றுக்கொண்ட போர் வீரன் வேலைக்கு ஏற்றதும் அவசியமானதாகவும் இருக்கிறது. அது

தடையானதாகவும் சிக்கலானதாகவும் கருதப்படக்கூடாது. இந்த கடமைகள் பொறுப்பில்லாமலும் மெத்தனமாகவும் விசுவாசமில்லாமலும் செய்யப்படக்கூடாது.

### நமது அதிபதி ஏற்றுக்கொண்டு அங்கீகரித்த அனைத்தும் நமக்கு சரியானதாக இருக்கின்றன

கிறிஸ்தவ போர் வீரனுடன் கூட இப்படியாக இருக்கிறது. வாழ்க்கையின் வழக்கமான வேலைகளாகிய வீட்டு வேலைகள், கடை வேலைகள், அனுதின உழைப்பு, எதுவும், அனைத்தும் தற்செயலானவைகளும், நமக்கும் நம்மை நம்பியிருக்கிறவர்களுக்கும் தேவையானவைகளைச் செய்வது, கர்த்தருடைய வேலைகளை கவனிப்பது அனைத்தும் கர்த்தரின் போர் வீரனாக சரியான ஈடுபாடாகும்.

அப்போஸ்தலர் பேதுரு, மீனைப் பிடித்து, அதன் வாயிலிருந்து நாணயத்தை எடுத்து அதை ஆண்டவருக்காகவும் தனக்காகவும் வரி செலுத்திய போதும், பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தரின் உயிர்த்தெழுதலையும் பரலோகம் சென்றதையும் அறிவித்த போதும் அவர் உண்மையிலேயே கர்த்தருக்கே ஊழியம் செய்தார். அப்போஸ்தலர் பவுல் (மற்றவர்களுக்கு தொந்திரவு செய்யாமல்) கூடார வேலை செய்து, மார்ஸ் மேடையில் இயேசுவைப் பற்றியும் அவரது உயிர்த்தெழுதலைப் பற்றியும் போதித்த போதும் உண்மையான சிலுவை வீரனாக சரியான வேலையை செய்தார். நமது இரட்சிப்பின் அதிபதியாகிய நமது கர்த்தரின் கனம் மற்றும் மகிமைக்காகவும் அல்லது சகல போர் வீரனின் நன்மைக்காகவும் அல்லது இந்த போருக்கான நமது சொந்த ஆயத்தத்திற்காகவும் அல்லது நமது அதிபதி ஏற்றுக்கொண்டு அங்கீகரித்த கடமைகளை செய்வது சிலுவை வீரனாக நமக்கு சரியான வேலையாக இருக்கிறது. அது இந்த வாழ்க்கையின் காரியங்களின் சிக்கல் இல்லை.

**R4839**

## DIVINE JUSTICE AND MERCY
## தெய்வீக நீதி மற்றும் கருணை

2 நாளாகமம் 23:1-20

“ தீமைகளை விட்டு ஓயுங்கள்; நன்மை செய்ய படியுங்கள்.” ஏசாயா 1:16,17

இந்த பாடத்தின் முக்கிய நபர், நல்ல ராஜாவாகிய எசேக்கியாவின் மகன், மனாசேயாகும். அவன் தனது பன்னிரண்டாவது வயதில் யூதாவின் ராஜ்ய பாரத்துக்கு வந்த ஒரு நல்ல ராஜாவின் கெட்ட மகன், நல்ல பிதாக்கள் கெட்ட மகன்கள், கெட்ட பிதாக்கள் நல்ல மகன்கள் என்ற இந்த காரியம் நல்ல அல்லது கெட்ட குணநலம் உடைய தாய்மார்களாலும், மற்றும் ராஜாவானவன் அரசாட்சி வேலையில் முழுமையாக ஈடுபட்டு, பிள்ளைகளின் வளர்ப்புக்கு சரியான கவனிப்பு கொடுக்காததினாலும் ஆகும். எனினும் சில விதிவிலக்கு ஒவ்வொரு கொள்கையிலும் இருக்கிறது. ஆனால் பெற்றோர்களுக்கு எதிராக பிரதிபலித்து, தப்பிக்கும் கிருபையான குழந்தைகளை தவிர்ப்பது இயலாததாகும்.

### பெற்றோர்களின் பொறுப்புகளின் புனிதத்தன்மையை எப்படி சிலர் உணர்கின்றனர்

பெற்றோரின் கடமை சந்தோகத்திற்கிடமில்லாமல் மானிட வாழ்க்கையில் உயர்ந்த மற்றும் மிகவும் முக்கியமான வேலையாகும். எனினும் சிலர் மட்டும் பெற்றோரின் பொறுப்புக்களின் புனிதத்தை எப்படி உணர்கின்றனர்! “அசுத்தமானதிலிருந்து சுத்தமானதை பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ?” என்று தீர்க்கதரிசி கேட்கிறார். நமது இனத்தில் யாரும் பூரணர் இல்லை என்கிற அனுமானத்தை ஏற்றுக்கொள்ளும் போது, குழந்தைகளின் நல்ல மற்றும் கெட்ட குணங்களுக்கு பெற்றோர்கள் பெரும் பொறுப்பு ஏற்கிறார்கள் என்பதையும் ஏற்றுகொள்ள வேண்டும். இந்தப் பொறுப்பு திருமணத்திற்கு முன்பு இனச்சேர்க்கையில் உணரப்பட வேண்டும். சமதளத்தில் இருப்பு இனப்பெருக்கம் **(Stock Breeding)** போல் திருமணம் செய்யப்பட வேண்டும் என்றும் நுட்பமான உணர்வுகள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் வற்புறுத்தவில்லை. வாழ்க்கையின் முக்கியமான உடன்படிக்கையில் தெளிந்த புத்தியுள்ள ஆவி நாடப்பட வேண்டும். ஏனெனில் இது விதியை மாத்திரமல்ல, ஜோடி மற்றும் அவர்களது சந்ததியின் சந்தோஷத்தையும் பாதிக்கவல்லது.

பல்வேறு விதமான பழங்கள், மலர்கள் மற்றும் காய்கறிகளை பெறுவதற்கு அதிகமாக அக்கறை காட்டும் ஆராய்ச்சியாளர்கள், மனித இனத்தில் சரியான இலட்சியங்களை அடைய சரியான கவனம் செலுத்தப்படவில்லை என்பது வெட்கத்திற்குரியதாக இருக்கிறது. உண்மையிலேயே பெரும்பாலானவற்றில் சீர்மை இல்லை. குருட்டுத்தனமாக, மிருக உணர்ச்சி மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறது.

நல்ல குதிரைகள், நாய்கள், கால்நடைகள் முதலானவற்றை வளர்ப்பவர், இனப்பெருக்கம் செய்யும் போது அதன் தாயின் உடல், மனநலம், அதன் சுற்றுப்புறம் ஆகியவற்றை எப்படி கவனிக்க வேண்டும் என்பது பற்றி விளக்குவார். ஆனால் மிருகங்களை இனப்பெருக்கம் செய்யக்கூடிய இவர்கள், மனைவிக்கு, தங்களது சொந்த குழந்தைகளின் தாய்க்கு சரியான கவனம் கொடுப்பதில்லை. இனப்பெருக்கம் செய்யும் பெண் குதிரைக்கு, ஓடும் குதிரைகளின் படங்கள், குதிரைப் பந்தையத்தை பார்த்தல் போன்றவை பிறக்கப்போகிற குட்டிக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்பதை உணர்ந்த குதிரை ரசிகர்கள் இந்த கொள்கையை தனது மனைவிக்கு பயன்படுத்த தவறுவது எவ்வளவு விநோதமாக இருக்கிறது!

தாயானவள் குழந்தையை சுமக்கும் போது ஆயிரக்கணக்கான வழியில் பதற்றமும் எரிச்சலுடையவர்களாக இருக்கும் போது குழந்தைகள் பதட்டமாகவும் வெறித்தனமாகவும் இருப்பதில் ஆச்சரியம் இருக்கிறதா? குழந்தைகள் பரம்பரை உணர்வுகள், கோபம்,

சிற்றின்பம் ஆகியவற்றுடன் பிறப்பதற்கு காரணம் அவர்களது தாய்மார்களின் அனுபவங்கள் அவர்களிடம் பதிய வைக்கப்படுகிறது என்று நாம் நினைப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இந்த காரியங்களில் பெற்றோர்களின் சரியான தீர்மானம் மற்றும் புரிந்துகொள்ளுதல் அவர்களது பிள்ளைகளின் குணலட்சணங்களுக்கு சரியான அடித்தளமாக இருக்கும். இந்த அடித்தளத்தின் மேல் பொறுமையுடனும், ஜாக்கிரதையுடனும், அன்புடனும் தங்களது குழந்தைகளை நீதியின் உயர்ந்த தரநிலையில் சிருஷ்டிகரிடத்தில் விசுவாசம் மற்றும் பரிசுத்த அழகின் திசையில் அபிவிருத்தி செய்வார்கள். இது அனைவரது முயற்சியாக இருக்கும் போது, நாம் விரும்புகிற இந்த நிலைமைக்கு உலகத்தை எப்பொழுது கொண்டு வருகிறோம் என்ற நம்பிக்கை கொள்ளலாம். ஒரு போதும் நடக்காது! உலகமானது கர்த்தரின் உறுதியான வசனத்தின் அடிப்படையில் இல்லாததால் மரிக்கும் என்று நம்புங்கள். இந்த கர்த்தரின் வசனம், மேசியாவின் மாபெரும் ராஜ்யத்தில் பரத்திலிருந்து மனுக்குலத்திற்கு உதவி வரும் என்று வாக்குத்தத்தம் பண்ணுகிறது.

### இன்னோம் பள்ளத்தாக்கு

மனாசே ராஜா, விக்கிரக ஆராதனையை மறுபடியும் கொண்டு வந்து, ஆலயத்தில் பாகாலுக்கு பலிபீடங்களைக் கட்டி, கெட்ட ஆவிகளுடன் மந்திரங்களையும் தொடர்புகளையும் ஏற்படுத்தினான். தேசமானது அவர்களது ராஜாவின் மூன்று தீர்மானத்தின்படி நல்ல வழிக்கோ கெட்ட வழிக்கோ செல்ல தேவன் அனுமதித்தார். இப்படியாக ஜனங்கள் பாவம் செய்தார்கள். இதைத் தொடர்ந்து தண்டனை வந்தது. தண்டனையை நிறைவேற்ற கர்த்தர் அசீரியாவின் ராஜாவை அனுமதித்தார். அவன் பட்டணத்தை பிடித்து ராஜாவை கைதியாக கொண்டு சென்றான். விக்கிரக ஆராதனைக்கான தண்டனை நித்திய ஆக்கினை அல்ல. இந்த தப்பறையான கருத்து "இருண்ட யுகத்தில்" வந்தது. நாம் தேவனைப் பற்றியும் அவரது வார்த்தையைப் பற்றியும் சரியான புரிதலை பெற்றுக்கொண்டு வருகிறோம்.

ராஜா சில காலம் சிறையிலிருந்த பிறகு அவனுக்கு புத்தி வந்து பாடத்தை கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். அவனது நல்ல தகப்பனாகிய எசேக்கியாவைக் குறித்தும் அவன் பெற்ற தேவனுடைய ஆசீர்வாதத்தையும் குறித்தும் எண்ணங்கள் அவனது மனதிற்கு நிச்சயமாக வந்திருக்க வேண்டும். மனாசே வருத்தப்பட்டு தேவனிடம் மன்னிப்பைக் கோரி, அதை பெற்றான். அவனது ராஜ்யபாரத்திற்கு திரும்ப வந்தான்.

ராஜாவின் விக்கிர ஆராதனை குறித்த காரியங்கள் 2 நாளாகமம் 33:6இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. "அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தன் குமாரரை தீக்கடக்கப்பண்ணினான்." இந்த பள்ளத்தாக்கு எருசலேமுக்கு வெளியே தெற்கு பக்கத்தில் இருந்தது. அது தற்போது ஓரளவுக்கு மூடப்பட்டு பழத்தோட்டமாகியிருக்கிறது. பழங்காலத்தில் அது பெரும்பள்ளத்தாக்காக இருந்தது. ஒரு காலத்தில் மத சடங்காச்சாரங்கள் செய்யப்பட்டு வந்த இடமாக இருந்தது. ஒரு பெரிய பித்தளை சிலை நிறுவப்பட்டது. அது உள்ளே கூடு போல வெறுமையாக இருக்கும். அதன் கீழே வாயு மூலம் எரியும் தீ கட்டப்பட்டது. அந்த சிலை நீட்டப்பட்ட கைகளை உடையதாக இருந்தது. அது உஷ்ணப்படுத்தப்பட்டு அதில் சில சமயம் குழந்தைகள் புறஜாதி தேவதைகளுக்கு பலி கொடுக்கப்பட்டனர். இது சர்வ வல்லவரின் அங்கீகாரத்திற்கு முற்றிலும் மாறானது.

அதன்பிறகு இந்த இன்னோம் பள்ளத்தாக்கு மாசுப்படுத்தப்பட்டதால் அது தொழுகைக்குரிய இடமாக பயன்படுத்தப்படவில்லை. அது எருசலேமின் குப்பை கூளங்களை எரிக்கக்கூடிய இடமாக பயன்படுத்தப்பட்டது. இறந்து போன நாய்கள், எலிகள் முதலானவை அங்கே வீசப்பட்டு எரிக்கப்பட்டது. மரண தண்டைக்குட்டவர்களின் உடல்களும் இங்கே போடப்பட்டு எரிக்கப்பட்டன. இது அவர்களுக்கு எதிர்கால வாழ்க்கை இல்லை என்பதை குறிப்பிட்டது.

புதிய ஏற்பாட்டில் "இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கு" என்று கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இது கெ–ஹின்னோம் அல்லது இன்னோம் பிற்காலத்தில் கெஹென்னா என்று எழுப்பட்டிருக்கிறது. நமது கர்த்தர் இதை அநேகந்தடவை இரண்டாம் மரணத்திற்கு பயன்படுத்தியிருக்கிறார். தேவனுடைய கிருபையை வேண்டுமென்றே, தெரிந்தே, விடாப்பிடியாக மறுதலிக்கிறவர்களுக்கான இடமாக குறிப்பிடுகிறார்.

### நன்மை செய்ய படியுங்கள்

ஏசாயாவில் சொல்லப்பட்ட நமது வசனம், "தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்; நன்மை செய்ய படியுங்கள்" என்பது கர்த்தருடைய அறிவுரையாக இருக்கிறது. இது நமது இனத்தின் மேல் தேவனுடைய பொதுவான மனோபாவத்தைக் குறிக்கிறது. நாம் பாவிகளாயிருப்பதால் தேவன் நம்மிடம் கோபிப்பதில்லை. ஏனெனில் நாம் துர்குணத்தில் உருவானோம் என்றும் நமது தாய்மார்கள் நம்மை பாவத்தில் கர்ப்பந்தரித்தார்கள் என்றும் தேவனே விவரிக்கிறார். ஆகையால் நாம் நமது தவறான நிலைமையை உணர்ந்து மனந்திரும்பி, நம் திரணிக்குத்தக்கதாக நன்மை செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இந்த மறுரூபமாகுதலை நல்ல சித்தமும் சுத்தமான இருதயமும் அல்லது நீதிக்கான நேர்மையான முயற்சியும் இல்லாமல் நாமே செயல்பட்டு விளைவை ஏற்படுத்த முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு உதவியை, ஒத்தாசையை, நமது இரட்சகருக்குள் அவர் நமக்காக கொடுத்திருக்கிறார். விசுவாசத்தினால் அவரையும் அவரது வார்த்தையையும் ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு முன்னரே அவர்

உதவிகரமாக இருக்கிறார். அவரது இராஜ்யத்தை நிறுவுவதின் மூலமாக மனுக்குலம் அனைத்திற்கும் ஒத்தாசை பண்ணுபவராக இருப்பார். முடிவாக நீதியை நேசித்து அக்கிரமத்தை வெறுக்கிற அனைவரும் நித்திய ஜீவனை அடையும்படி செய்யப்படும். அக்கிரமத்தை சிநேகித்து நீதியை வெறுக்கிற அனைவரும் இரண்டாம் மரணமாகிய தண்டனையை அடைவார்கள். "அவர்கள் அவருடைய மகிமை பொருந்திய மகிமையிலிருந்து நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." அது கெஹென்னா என்று அடையாளமாக குறிப்பிடப்படுகிறது.

R4840

## DELIVERANCE FROM THE CURSE
## சாபத்திலிருந்து விடுதலை

"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்."
"தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்." 1 யோவான் 5:12; யோவான் 3:36

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசி தனது இருதயத்திலிருந்து விசுவாசிப்பவர். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற உண்மையை அறிவுடன் மதித்தல் அல்ல. "நீதியுண்டாக இருதயத்தில் மனிதன் விசுவாசிக்கிறான்." தேவனுடைய குமாரனை தனது தலைவராக, சரீரத்தின் தலையாக ஒப்புக்கொள்ள அவருடன் உறவுக்குள் வந்திருக்கிறவர் என்று பொருள்படும். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்." இப்படிப்பட்ட ஒருவனுக்கு தற்காலத்தில் இந்த ஜீவன் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே, முழுமையான உணர்வுடன் பெற்றிருக்கவில்லை. அவன் உண்மையுள்ளவனாயிருந்தால் அவன் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும்படி புதிய சுபாவத்திற்கும், வாக்குத்தத்தத்திற்கும் வெறும் ஜெனிப்பித்தலை பெற்றிருக்கிறான். "முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடு கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள்."(வெளிப்படுத்தல் 20:6)

ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே வரக்கூடிய இந்த உயிர்த்தெழுதலின் மாற்றத்தில் உண்மையான உணர்வில் ஜீவனை பெற்றிருப்பார்கள். இப்போது புது சிருஷ்டிகளாக காணப்படுகிறார்கள். மரண தீர்ப்பிலிருந்து அவர்கள் கடந்திருக்கிறார்கள். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்." (ரோமர் 6:23) ஆகையால் இந்த கிருபையை ஏற்றுக்கொண்டவர்கள் இந்த நிலைமையில் இருக்கிறார்கள். மனுக்குலத்தில் மீதியானவர்கள் தேவ கோபத்தில், மரண தண்டனையின் கீழாக இருக்கிறார்கள். அவர்கள் நித்திய ஆக்கினையின் தண்டனையின் கீழாக இல்லை. ஆனால் சாபத்தில் மரண தண்டடைனயில் இருக்கிறார்கள். அனைத்து மனுக்குலமும் இந்த தண்டனையின் கீழாக பிறந்திருக்கிறர்கள். ஆகையால் அப்போஸ்தலர் மறுபடியும் கூறுகிறதாவது: "நாம் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பியிருக்கிறோம்." (2 பேதுரு 1:4) அது இன்னும் உலகத்தின் மேல் இருககிறது. நாம் விடுதலையடைந்திருக்கிறோம்.

### புதிய உடன்படிக்கை இஸ்ரயேலரோடு செய்யப்பட வேண்டும்

எனினும் இந்த யுகத்திற்கும் அடுத்த யுகத்திற்கும் வித்தியாசம் உண்டு. உலகமானது சோதனைக்குள் வைக்கப்படும் முன்பு, தலையாகிய கிறிஸ்துவும் அதன் சரீரமாகிய சபையும் சேர்ந்த மத்தியஸ்தரை பெற்றிருக்கும். இந்த மத்தியஸ்தர் தெய்வீக நீதிக்கும் திரளான மனுக்குலத்திற்கும் இடையே நிற்பார். மத்தியஸ்தர் செய்யும் முதலாவது வேலை புது உடன்படிக்கையை அமலுக்கு கொண்டு வருவதாகும். எரேமியா தீர்க்கதரிசி புதிய உடன்படிக்கை இஸ்ரயேலுடன் ஆரம்பிக்கப்படும் என்று கூறுகிறார். (எரேமியா 31:31) "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்." மேசியா அந்த புது உடனபடிக்கையின் மத்தியஸ்தராக இருப்பார். மோசே இந்த மாபெரும் மத்தியஸ்தருக்கு முன்னடையாளமாக இருக்கிறார். நியாயப்பிரமாணம் இந்த புதிய உடன்படிக்கைக்கு முன்னடையாளம். யூதர்கள் அனைவரும் மோசேயிடமிருந்து மேலான மத்தியஸ்தராகிய கிறிஸ்துவுக்கு மாற்றப்படுவார்கள்; பழைய நியாயப்பிரமாணத்திலிருந்து புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மாற்றப்படுவார்கள்.

அவர்கள் தங்கள் தேவையை உணர வருவதால், புது உடன்படிக்கை அனைவருக்கும் திறந்திருக்கும். அவர்களுக்கு தேவையானதெல்லம் மத்தியஸ்தர் மூலமாக நிறைவேற்றப்படும். அந்த காலத்தின் ஆசீர்வாதங்களில் யூதர்களுடன் பங்குபெற அனைவரும் மேசியாவின் ராஜ்யத்தின் ஏற்பாடுகளுக்கு கீழ் வரவேண்டும். நாம் வாசிப்பதாவது: "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து, நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்கும் போதிப்பார். நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருலேமிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."

(ஏசாயா 2:3; மீகா 4:2) அவர் யூதருக்கு முதலில் செய்துவிட்டு பிறகு நமக்கும் செய்வார் என்று அவர்கள் சொல்வார்கள்.

**"அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படுவார்"**

இப்படியாக கர்த்தருடைய ஆசீர்வாதம் ஒரு தேசத்திலிருந்து மற்ற தேசத்துக்கும் முழு உலகத்துக்கும் விரிவுபடுத்தப்படும். இப்படியாக பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும். எனினும் புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகள், மனுக்குலம் மத்தியஸ்தரை ஏற்றுக்கொள்ளும் அளவுக்குத்தக்கதாகவே ஆசீர்வாதத்தை கொண்டு வரும். அவர்கள் புது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக வருவதால் ஆயிர வருட யுகம் முழுவதும் அவர்களது மனக்கண்கள் திறக்கப்படும். இப்படியாக அடுத்த யுகத்தில் மாபெரும் ஜீவனை அளிப்பவர் மூலமாக ஜீவனைப் பெற்றுவதற்கும் தற்போது ஜீவனை பெறுவதற்கும் வித்தியாசம் இருக்கும். ஆயிரம் வருட யுகம் முழுவதும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து ஆளுகை செய்யும் மகிமையான ஆளுகையில், இஸ்ரயேலையும் உலகத்தையும் அபிவிருத்தி செய்து, அவர்களது விழுந்து போன நிலைமையிலிருந்து பூரணத்திற்கு கொண்டு வரப்படும்.

தீர்க்கதரிசி ஏசாயா கூறுவது போல, "அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு" என்று அழைக்கப்படுவார். (ஏசாயா 9:6) ஆகையால் மாபெரும் மத்தியஸ்தர் மற்றும் சகல ஜனங்களுக்கும் இடையே இருக்கும் உறவு பிதா மற்றும் அவரது பிள்ளைகள் என்கிற அளவுக்கு இருக்கும். நித்திய ஜீவனை விரும்புகிறவர்களுக்கு அளிக்கும் காலமாக கிறிஸ்து ஆளுகை செய்யும் காலம் இருக்கும். நித்திய ஜீவனுக்கு வரும்படி ஒவ்வொரு ஜீவிக்கும் முழுமையான சந்தர்ப்பமும் முழுமையான சோதனையும் கொடுக்கப்படும். ஆயிரம் வருட யுகத்தின் முடிவில் மனுக்குலம் அனைத்தும் கடைசியாக சோதிக்கப்படுவதற்கு தேவனிடம் அனுப்பப்படுவார்கள்.

எனினும் சபைக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள உறவு வித்தியாசமானது. அவர் நமக்கு பிதா இல்லை. அவர் நமது சகோதரர். அவர் நமக்கு பரிகாரி; அவர் மூலம் தான் நாம் பிதாவானவரிடம் செல்ல முடியும்; அவர் மூலம் தான் நாம் பிதாவானவரை அப்பா, பிதாவே என்று கூப்பிட முடியும்.

நமது வசனம் இப்பொழுதுதான் சரியானபடி பயன்படுத்தப்படுகிறது. மனிதர்கள் சத்திய அறிவுக்கு வருவதால் ஆயிரம் வருட யுகத்தில் இது படிப்படியாக பயன்படுத்தப்படும். யூதர்கள் ஒரு ஜாதியாக நியாயப்பிரமாண உடன்படிக்கையிலிருந்து புது உடன்படிக்கைக்கு மாற்றப்படுவார்கள். ஏற்ற காலத்தில் அவர்கள் மாற்றம் அடையும்படி தேவன் அவர்களை உடன்படிக்கைக்கு கீழாக வைத்தார். ஆனால் மற்ற ஜனங்களைப் போல மாபெரும் மத்தியஸ்தரை ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டிருப்பார்கள். அந்த கணத்திலிருந்து புது உடன்படிக்கை அவர்களை மூடும்படியான ஏற்பாட்டின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். தேவனுடைய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மேல் தேவ கோபம் இன்னும் இருக்கும்.

R4841

## "LOVE CASTETH OUR FEAR"

## "அன்பு பயத்தை புறம்பே தள்ளும்"

வசனம் "அன்பிலே பயமில்லை" என்ற கருத்தை நன்றாக சொல்லியிருக்கிறது. நாம் அன்பு செலுத்துகிறவர்களை நாம் பயமுறுத்தமாட்டோம். எனினும் இன்னொரு பொருளில், நாம் அதிகமாக அன்பு செலுத்தினால் அதிகமாக பயப்படுவோம். நாம் அன்பு செலுத்தாதவர்களை பிரியப்படுத்த நாம் அக்கறை கொள்ளமாட்டோம். அப்போஸ்தலர் நம்மை நீக்கச் சொல்லுகிற பயம் இந்த வகையான பயம் அல்ல. மாறாக இது மிகவும் மேம்படுத்தப்பட வேண்டியது. பயம் என்ற வார்த்தை நமது வசனத்தில் மிகவும் துல்லியமாக அதன் கருத்தை சொல்லியிருக்கிறது.

"அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வ பயமில்லை" என்று சிலரைக் குறித்து வேதவாக்கியங்கள் கூறுகின்றன. (ரோமர் 3:18) இவர்கள் மீண்டும் உருவாக்கப்படாதவர்கள். பெரும்பாலும் மனிதர்களிடையே தேவனைப் பற்றியும் எதிர்காலத்தைக் குறித்தும் எண்ணமே இல்லாதிருக்கிறது. எல்லா இருதயங்களிலும் பயம் இருக்கிறது என்று இந்த வசனத்தில் அப்போஸ்தலர் கூறவில்லை. ஆனால் எந்த இருதயத்திலாவது பயம் இருந்தால் அன்பானது அதை நீக்கிவிடும். அறிவும் அன்பும் பெருகும் போது பயமானது குறைகிறது. உலகத்தாரில் பயபக்தியுடைய பயம் உடையவர்கள் விரும்பத்தக்க மனோபாவம் உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் சிந்தனையற்றவர்களைக் காட்டிலும் நல்ல நிலையிலிருக்கிறார்கள். வாழ்க்கையில் நம்மை சுற்றியிருக்கிற குறிப்பிட்ட சூழ்நிலையில் பயபக்தி தேவையாயிருக்கிறது. ஒருவர் சீரழியாத நிலையில் இருந்தால் பயபக்தி என்பது மானசீக சுபாவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகையால் வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின ஆரம்பம்." (நீதிமொழிகள் 9:10) கர்த்தருக்கு பயப்படுதல், கர்த்தரிடம் உள்ள பயபக்தி ஆசீர்வாதத்தை கொண்டு வரும். கர்த்தருக்கு பயப்படுகிற பயம், தேவனுடைய பிள்ளையை அவரைப் பற்றி அதிகமாக தெரிந்துகொள்ளும், விருப்பத்தை அதிகரிக்கிறது. ஆனால் அது படிப்படியான ஒரு காரியம்.

அபூரணமான அறிவினால் ஒரு வகையான பயம் வருகிறதாயிருக்கிறது. மனித மனதில் வருகிற எல்லா

தீமையான எண்ணங்களுக்கும் சத்துருவையே நாம் காரணம் சொல்ல முடியாது. ஆனாலும் அவன் நமது இனத்தை சுற்றி தீமையான தாக்கங்களை ஏற்படுத்துகிறவனாய் இருக்கிறான். ஜனங்கள் தேவ பயம் இல்லாதிருக்கக்கூடும். அவர்கள் கர்த்தரிடத்தில் வந்து அவரிடம் பயபக்தியை காண்பிக்கவும் அவரைப் பற்றி அறியவும் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் சரியான வகையான பயத்தில் குறைவுபடுகிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். அதன் பிறகு சத்துருவானவனின் திட்டம் அவர்களது மனதில் பயத்தை ஏற்படுத்துவதாகும்.

எல்லா புறஜாதி ஜனங்களிலும் இதைக் காண்கிறோம். தேவனைப் பற்றிய கொஞ்ச அறிவை அவர்கள் பெற்றவுடனேயே அன்பை நீக்கி பயத்தை ஏற்படுத்துகிற அடிமைத்தன பயத்தை உண்டாக்குகிறான். "இப்பிரபஞ்சத்தின தேவனானவன் அவர்களது மனதை குருடாக்கினான்" என்று நாம் வாசிக்கிறோம். (2 கொரிந்தியர் 4:4) நம்மிடத்தில் காணப்படுகிற அநேக காரியங்களுக்கு இந்த தீமையான செல்வாக்குதான் காரணமாக இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். புற ஜாதிகள் தெய்வ பயத்தோடு கூடிய பிசாசின் போதனைகளை பெற்றிருக்கிறார்கள் என்பதை இது விளக்குகிறது. உலகத்தனத்தில் இருக்கக்கூடிய, தேவனைப் பற்றி அறிந்திருக்கக்கூடிய யூதர்களும் கிறிஸ்தவர்களும் பயம் உடையவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் புற ஜாதியாரைக் காட்டிலும் தேவனுடைய குணலட்சணத்தைக் குறித்து அதிக வெளிச்சம் பெற்றிருப்பதால் புற ஜாதியாரைக் காட்டிலும் அவர்கள் குறைவான பயத்தை பெற்றிப்பார்கள்.

**ஒரு குறிப்பிட்ட வகையான பயம் சரியானது**

நமது வசனம் கிறிஸ்தவர்களுக்கு பயமே இருக்கக்கூடாது என்று சொல்வதற்காக கொடுக்கப்படவில்லை. இந்த உண்மை முதல் கிறிஸ்தவராகிய நமது கர்த்தரின் அனுபவத்தில் கெத்செமனே தோட்டத்தில் காண்பிக்கப்பட்டது. இந்த காரியத்தைக் குறித்து அப்போஸ்தலர் கூறும் போது அவரது பயத்தில் அவர் கேட்கப்பட்டார் என்று கூறுகிறார். தம்மை மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடு விண்ணப்பம் பண்ணினார்; (எபிரேயர் 5:7) ஆண்டவர் பயந்தார் என்றால் அவரது சீஷர்களும் பயப்பட வேண்டும். அப்போஸ்தலர் கூறுவதாவது: "அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு ஏதுவான வாக்குத்தத்தம் உண்டாயிருக்க உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கி போனவனாகக் காணப்படாதபடிக்கு பயந்திருக்கடவோம்." (எபிரேயர் 4:1) இந்த பயத்தை எப்படி நாம் நமது வசனத்தோடு இசைவுபடுத்துவோம். கற்பிக்கப்பட்ட மாபெரும் பாடங்களுக்கு எதிராக இந்த வசனம் சொல்லப்படவில்லை. நமது கர்த்தராகிய இயேசு தம்மை நேசித்த பிதாவானவரிடம் வேண்டுதல் செய்தார். பிதாவானவர் பரிபூரணராக நீதியுள்ளவராக நியாயம் உள்ளவராக இருந்தார் என்பதை அவர் அறிவார். சில தேவைகளை நிறைவேற்றுவதில் குறைவுபடுவோமோ என்று பயந்தார்.

அதே போல நம்மோடும் இருக்கிறது, "தேவன் அன்பாக இருக்கிறார்" என்பதை நாம் அறிவோமாக. (1 யோவான் 4:8) நாம் பயந்து, தேவனை பிரியப்படுத்த ஜாக்கிரதையுடன் இருப்போமாக. நாம் எந்த அளவிலாவது குறைவுபடுவோமோ என்று நாம் பயந்திருக்க வேண்டும். அறியாமை பயத்தை பிறப்பிக்கும். ஆனால் தேவனுக்கான அன்பு பயத்தை விரட்ட நம்மை சாத்தியமாக்குகிறது; நமக்கு தேவனிடம் மிகுந்த நம்பிக்கை வரச் செய்கிறது. ஆகையால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்று முழு நம்பிக்கையுடன் நாம் "அவருடன் சேருவோமாக." (யாக்கோபு 4:8) இந்த கருத்து புறஜாதி சிந்தைக்கு மிகவும் எதிராக இருக்கிறது. தேவனைப்பற்றிய அவர்களது கருத்து பிசாசுக்குரியது. மறுபுறம் ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கும் கிறிஸ்தவர்கள் தேவனை நேசிக்கவும் பிதாவின் சித்தத்தை மட்டுமே செய்யவும் கற்றுக்கொள்ளுகிறார்கள். அன்பினால் தூண்டப்படாத எந்த பலியும் ஏற்புடையதல்ல. "தம்மை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று பிதாவானவர் விரும்புகிறார்." (யோவான் 4:23, 24)

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ.C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்
வெளியிடுபவர் :

சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை,
எண். 22, முதல் தெரு, ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை - 600 019.
கைபேசி : 97909 00030. மின்னஞ்சல் : mbsaselvaraj@gmail.com
Website : www.thestudiesinthescriptures. com

**FOR PRIVATE CIRCULATION ONLY**